புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் வருஷம் ஜூலை மீ 26உ [ந. 54.

வி

பிரஸங்கம் 54.

## ஒரு பெரிய சூதாட்டம்.

சரித்திர பூர்வமாக நமக்குத் தெரிந்தமட்டில் மஹா பெரிய யுத்தமென்று சொல்லக்கூடிய ருஷ்யாவின்பேரில் ஜெர்மனி தொடுத்திருக்கும் தாக்குதலைப்பற்றி நாம் இதுவரை எவ்விதமான அபிப்பிராயங்களையும் வெளியிடவில்லை. அப்படிப் பட்ட அபிப்பிராயங்கள் கொள்வதற்குவேண்டிய விஷயங்கள் மிகவும் குறைவாக

இருந்திருக்கிறது. இந்த உபந்நியாசம் அச்சிடப்பட்டு வெளிப்படுவதற்குள் இந்த மஹாயுத்தம் ஆரம்பித்து சுமார் ஒருமாதகாலம் ஆகிவிடலாம். மத்திய காலத்தில் ஐரோப்பா கண்டத்தின் தேசங்களுடைய எல்லைகளில் சில மாறுதல்கள் ஏற்படலாம். ஐரோப்பாவிலுள்ள தேசங்களில் பலவிடங்களிலிருந்து அவரவர் களின் மனோபாவத்தை ஒத்துவரும் சமாசாரங்களை ஆதாரமாகவைத்து இந்தப் பெரிய யுத்தத்தைப்பற்றி சுருக்கமாய் எடுத்துச்சொல்லவும் இடம் கொடுக்கும்.

## சொப்பனம்.

இதற்கு முந்திய ஒரு அறிக்கையில் ஹிட்லருக்கு பைத்தியம் பிடிக்கவில்லை என்று ஒருவிதமான அபிப்பிராயத்தைக் காட்டினோம். அவர் குட்டிச்சுவரில் முட்டிக்கமாட்டாரென்று வருங்காலத்தில் நல்லதே சம்பவிக்குமென்று நினைக்கும் சில உத்சாகமான மனிதர்கள் தெரிவித்தார்கள். நாஸிகள் வசமிருக்கும் சில விஷயங்களிலிருந்து அவர்கள் செய்யும் முயற்சி வீண் முயற்சி இல்லையென்றும் உத்தேசித்த பலனைக்கொடுக்கக்கூடும் என்றும் சிலர் அபிப்பிராயப்பட்டிருக் கிறார்கள். சென்ற வாரத்திய யுத்தக்குறிப்பில் நாம் எடுத்துக்காண்பித்திருப்பது போல் இந்த யுத்தத்தில் ஜெர்மனி ஜயிக்குமாயின் அதனுடைய பலன் வ்ளாடி வாஸ்டாக்கிலிருந்து (Vladivostok) பிஸ்கே வளைகுடா (Bay of Biscay) வரையில் ஜெர்மன் சாம்ராஜ்ஜியம் ஏற்படுவதோடு மத்தியப்பிரதேசங்களிலுள்ள உலோகங் களென்ன, விளைபொருள்களென்ன, மற்றுமுள்ள சாமான்களென்ன அவர்கள் சுவாதீனப்பட்டு விடுமென்றும், அவ்வித சாமான்களை ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு வேண்டிய துறை முகங்கள் இதர சாதனங்கள் ஏற்பட்டுவிடுமென்றும், அவர்களுக்குப் பேட்டியாக வியாபாரம் செய்பவர்களுடைய கதி மோசமாய்விடுமென்றும், அவர்கள் முடிவில் ஜெர்மனிக்கு பவ்யப்படும்படியாய் நேரிடுமென்றும் கூறினோம். ஏனெனில் சமாதானத்தின்பயனாக இரண்டு அமெரிக்காக்களும், களைத்த பிரிடிஷ் சாம் ராஜ்ஜியமும் அல்லது புதியதான ஜப்பானிய பஸிபிக் சாம்ராஜ்ஜியம் இருந்துவந்த போதிலும், அவைகள் விருத்தியடையமுடியாது. ஏனென்றால், இப்போதே நமக்கு அனுபவப்பட்டவிதமாக ஜெர்மானிய கைத்தொழில்கள், ராஜாங்க பண உதவி மேல்பார்வை இவைகளால் அடிமைத்தொழிளாளிகளைக்கொண்டு தயாரிக் கப்பட்டு உலகம் முழுவதும் வியாபித்துவிடும். இதுதான் ஹிட்லரின் சொப்பனம். கிரமப்படிக்கு பிரிடனை அழித்து பின்னால் ருஷ்யாவை எதிர்க்கவேண்டியது இருக்க முதலில் ருஷ்யாவை அவர் எதிர்த்தபோதிலும், இந்த எண்ணமானது ஒத்துமையும் உத்ஸாஹமும்கொண்ட ஒரு வலுத்த யோக்கியப் பொறுப்பற்ற ஒரு வர்க்கத்தார் கைக்கொண்டிருக்கிறார்கள்.

## பைத்தியத்திலும் விஷயம்.

இந்த யுத்த சம்பந்தமாக சமாசாரங்கள் வந்தபொழுது ஹிட்லர் கொஞ்ச மேனும் மூளை இல்லாதவன் என்று பலர் சொல்வதைக்கேட்க ஆச்சரியமா யிருந்தது. அவர் செய்த காரியத்திற்கு ஏதோ சில காரணங்கள் இருந்தன என்பது ஹிட்லரின் பிரசாரத்திலிருந்தே தெரிந்தபோதிலும், அநேக பத்திரிகை

களும், ஒலிபரப்புகளும் அதைச்சரிவர மனதிற்கு வாங்கவில்லை. இந்தப் போரானது ஏதோ ஒரு புதிய முறைக்கும், அபேதவாதம் என்ற பிசாசுக்குமுள்ள ஓர் போரென்று ஹிட்லர் பறைசாத்துவதிலிருந்து பிரிடன் ஏமாறவில்லை. ஜெர்மனியின் க்ஷேமம் என்பதைவைத்து தத்துவங்களையும், ஞாயங்களையும், சக்ஷிகளையும், உடன்படிக்கைகளையும், ஹிட்லர் கோஷ்டி மதிக்கிறதில்லை என்பது நமக்குத் தெரியும். பிரிடனே உலக நாகரிகத்திற்கே அனர்த்தமாகக்கிளம்பிய இப்பெரும் விபத்தை அழிக்கவேண்டும் என்ற எண்ணத்தைக்கொண்டிருக்கிறது. எல்லா தேசத்தாருமே, இவ்வெண்ணம் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லமுடியவில்லை. உலகத்தில் அமைதியும் செல்வமும் இருக்கவேண்டியதற்கு புதிய கொள்கைகளும் பழையகொள்கைகளும் பேட்டிபோட்டு வருவதில் ஒரு வழியிலும் சேராமல் சிலதேசத்தார்கள் முற்றிலுமோ அல்லது ஒரு பகுதியிலோ முடிவிற்கு வராமல் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் ஹிட்லர் பக்கம் சேரலாம் என்பது ஹிட்லருக்குத்தெரியும். இப்படிச் சேருபவர் மதவித்தியாஸம் உள்ளவர்களிலும்கூட காணலாம். ஆகையால் தன் சாணக்கியத்தால் பின்வருமாறு பிரசாரம் கிளப்பினார்.

(a) சென்ற 20 வருஷமாக ருஷ்யாவிற்கு யார் சிநேகிதர்கள்? ஒருவரும் இல்லை. தனிமையில் பிறரால் நிந்திக்கப்பட்டு தனக்குள்ளேயே தான் உழண்டுகொண்டு, பெரிய தேசத்தாரில் ஒன்றாயிருக்கவேண்டி ஒரு பாராச்சாரியான பிசாசாக தன்னை ஊதிக்கொண்டது. பஞ்ச் (Punch) பத்திரிகை, படம் ஒன்றில் ஒரு வீதியில் அலையும் சிறுவன் அடிபிடி சண்டையில் மாட்டிக்கொண்ட ஒருவனைப் பற்றி "இழுத்து உதையடா, அவனுக்கு உதவிக்கு ஆளில்லை" என்று சொன்னது போல் இருக்கிறது.

(b) வேர்க்க விருவிருக்க ராஜதந்திரம் மூன்று நான்கு வருஷம் செய்து அதன்மேல் இரண்டு வருஷம் போர்புரிந்து இருக்கும் இச்சமயம் நமது சாயம் கொஞ்சம் வெளுக்கத் தொடங்குகிறது. நம்ப ஜம்பத்தைக்கண்டு ஸ்காண்டிநேவியர்களும் (Scandinavians), ஸ்பெயின் தேசத்தாரும், போலண்டு தேசத்தாரும், ஜெக்கர்களும், கிரேக்கர்களும் மதிக்கிறார்கள் இல்லை. அவர்கள் தேடுவது பிரகாசமான இரும்பு அங்கிகள். வெகுநாளாக ஐரோப்பாவையும், அமெரிக்காவையும் கலங்கச் செய்துவந்த அபேதவாதம் என்ற கொள்கையை எதிர்ப்போம். ஆகையால் கிறிஸ்துவ மதத்தின் சார்பாக சண்டைசெய்யப்போன வீரர்களைப் போல் இந்த யுத்தத்தை நாம் ஒரு மத சம்பந்தமான யுத்தத்தைப்போல் நடத்த வேண்டும்.

## கஞ்சாவும், மதிமயங்கினவர்களும்.

டாக்டர் கோயபல்ஸ் துவக்கினார் வேலையை. ஜெர்மனியிலும், வசமாக்கப்பட்ட பத்திரிகைகளைக்கொண்டு ஆக்கிரமண நாடுகளிலும், தேசத்துரோகிகளைக் கொண்டும் ஜெர்மன் ஸ்தானிகர்களைக்கொண்டும் நடுநிலைமை நாடுகளிலும் தர்ம யுத்தமென்ற பெயர் வைத்து பத்திரிகைப் பிரசாரங்கள் பிரவாகமாக வருகின்றன.

ஒரு பத்திரிகையானது இந்த யுத்தத்தின் விஷயத்தை சரியாக அறிந்துகொண்டவர்களென்று பல தேசத்தாரைக் குறிப்பிடுகிறது. இன்னமும் சொல்லுகிறது:— "அபேதவாதிகளுக்காக பிரிட்டனானது ஜெர்மனியை எதிர்த்து ஐரோப்பாவையே மறியல் செய்கிறது......பிரிட்டன் ஐரோப்பாவை கஷ்டத்திற்கு உள்ளாக்கி மெள்ள ஒதுங்கிவிடும்......உலக நாசத்திற்கென்று தலைப்பட்டிருப்பவர்களை தோற்கடித்து உலகத்தைச்சீர்படுத்த முன் வந்திருப்பவர்களை அனுசரிக்க (ஸஹாயிக்க) ஐரோப்பா ஜனங்கள் தயாராக இருக்கிறார்கள்." இன்னொரு பத்திரிகை சொல்லுகிறது:— "ஹிட்லர் ஓர் பலமான கக்ஷிக்குத் தலைவர்; அபேத வாதத்திலிருந்து ஐரோப்பாவை விடுவிக்க முன்வந்திருக்கும் ராணுவத்தாருடன் கூடஇருந்து ரத்தம் சிந்த சண்டை செய்ய அவர்கள் தயாராய் இருக்கிறார்கள்."

மாட்ரிட்டிலிருந்து (Madrid) ஜெர்மனியின் நிருபரான வால்டர் பாஸ்டியன் என்பவர் சொல்லுகிறார்:— "ஸ்பெயின்காரர், இதாலியர்கள், ஜெர்மானியர் ஒருவரை ஒருவர் டிராம் வண்டிகளிலும் ஹோட்டல்களிலும் சந்தித்தால் பாஸிஸ்ட் முறையில் ஸலாம் செய்து கொள்ளுகிறார்கள். ருஷ்யாபேரில் புரியப்படும் இந்த தர்ம யுத்தத்தைப்பற்றித் தான் எங்குமே பேச்சு."

ஐரோப்பிய நாகரீகத்தையே காப்பற்றவேண்டுமென்று, இந்த வெட்கம் கெட்ட இங்கிலீஷ்காரரைத் தவிர மற்ற எல்லா ஐரோப்பிய தேசத்தாரும் சண்டைபோட்டு வருகிறார்கள் என்ற எண்ணமானது எல்லோர் மனதிலும் உண்டாகும்படி தன் வசமுள்ள பத்திரிகைகளைக்கொண்டு வேலை செய்கிறார்கள். 'போர்சென்' என்ற கோபன்ஹேகன் பத்திரிகையில் ஜூன் 27-ல் பின்வருமாறு:—"இந்தச் சண்டை ஐரோப்பாவிற்கு பொதுவான சண்டை.......... டென்மார்க் யுத்தத்தில் கலக்கவில்லை, ஆயினும் ஐரோப்பாவின் பொது நலத்தை உத்தேசித்து டென்மார்க் சும்மா இருக்கக்கூடாது." இந்த எண்ணத்தைக் கொண்டுதான் டேனிஷ் ஸ்தானிகர்கள் மாஸ்கோவிலிருந்து திரும்பிவந்து விட்டதாகச் சொல்லுகிறார்கள்!

## இன்னமும் ஏமாந்தவர்கள்.

நாம் பைத்தியக்காரத்தனமென்று நினைக்கிற வேலையாலேயே, அரை மனதாயிருக்கிறவர்களில் சிலர் அச்சு தேசத்தாரைச் சேரலாம். பின்லண்டும் ருமேனியாவும் ஹிட்லரின் பக்கம் சண்டையிடுகிறார்கள். ஹங்கேரியிலும், ஸ்பெயினிலுமுள்ள பொது மக்கள் அவன் பக்ஷம் ஜாஸ்தி அனுதாபம் காட்டலாம்; அல்லது அபேதவாதிகள் பக்கம் அவர்களுடன் நின்று சண்டை செய்யும் நம்மிடம் அனுதாபமில்லாதவர்களாக விருக்கலாம். ஸ்காண்டிநேவியாவில் ஆக்கிரமிக்கப்பட்ட பாகமும் ஆக்கிரமிக்கப்படாத பாகமும் ருஷ்யாவிடம் மற்ற நாடுகளைக் காட்டிலும் விரோதமாகவே யிருக்கின்றன; நாஸித்வமா, புதுமுறையா என்று வாதாடி வந்த சமயம் லத்தீன் அமெரிக்காவில் நோக்கங்களைப்பற்றி விஷயம் சரிவர மனதிற்கு வாராமல் உளறுபடியாக விருந்ததில் அந்த சந்தேக நிலைமை ஊட்டி வளர்க்கப்பட்டது. அப்பேர்ப்பட்ட பேர்வழிகளுக்கு அச்சுதேச முறையா அபேதவாத அனர்த்தமாவென்று ஸ்பஷ்டமாகக் கக்ஷி பேதத்தைக் காண்பித்தால்

மனதிற்கு சுலபமாகப் புரியலாம். பிரிடனிலும், அமெரிக்காவிலும் ருஷ்யரை பின்லண்டுக்காரர்கள் எதிர்த்து நின்றபோது அவர்கள் போற்றப்பட்டார்கள். அவர்களை நாம் நமது பக்கம் இழுத்துக் கொள்ளவில்லையென்பதை வைத்து அச்சு தேசத்தார் லாபமடையப் பார்க்கலாம்.

ஸ்பெயினில் பலாஞ்சின் (Falange) செல்வாக்கு அதிகரித்திருக்கவேணும்; ஏனென்றால் அவர்கள் ருஷ்யாவை பரம விரோதிகளாக கருதிவந்திருக்கிறார்கள்; அவர்கள் ராணுவத்துடனும் கத்தோலிக் மதஸ்தர்களான மத்தியதர மக்களுடனும் இப்போது ஒன்று சேரலாம்; ஜெர்மானியர் கிளப்பிவிடுகிறபடி ருஷ்யாவுடன் சண்டை செய்யலாமென்ற யோசனை பலித்தால் நிர்ப்பந்தமன்னியில் மூவர் உடன்படிக்கையில் சுயேச்சையாக ஸ்பெயின் சேர்ந்ததாகும்.

## கிறிஸ்துவ கோவில்கள் சகாயம் தேடுதல்

ருஷ்யர்களுக்கு அதிகார தோரணையில் தெய்வம் கிடையாது. கீழ் நாட்டு மதஸ்தர்களை புரட்சிக்குப்பின் ருஷ்யர்கள் கொஞ்சம் ஹிம்சித்தார்கள். இவைகளை எல்லாம் கூடுமானவரை ஜெர்மானியர் உபயோகித்துப்பார்க்கிறார்கள். ருஷ்யாவை எதிர்ப்பது என்றால் காட்டுமிராண்டித்தனமான நாஸ்திகவாதத்திற்கு விரோதமாக கிறிஸ்துவ மத சார்பாக சண்டை போட்டதாகும். "கடலுக்கப்பால்" என்ற பத்திரிகையானது சொல்லுகிறது (இது பிசகாக இருக்கலாம்). ஜெர்மன் வைதிக வர்க்கத்தாரெல்லாம் இந்த எதிர்ப்பானது யுத்தத்தின் சுபாவத்தையே மாற்றிவிட்டதென்று செய்திவிடுத்திருக்கிறார்களாம். ஸோவியத்தை எதிர்ப்பது மத விஷயத்தில் சுயேச்சைக்காக போடும் சண்டை. இதை ஒத்து கோவில்களில் பாதிரிமார் பிரசங்கம் செய்யவேணுமாம்.

இப்படியே தான் கத்தோலிக் நாடுகளிலும் ஜூன் 27-ல் போப்பாண்டவர் அரண்மனையிலிருந்து ஒரு பத்திரிகை நிருபர் எழுதுகிறார்:—"ஜெர்மானியரும் இதாலியரும் ருஷ்யாவுடன் சண்டைக்குப் போனதில் எல்லோருக்குமே வெகு திருப்தி. இதனால் மதத்திற்கும் குடும்ப க்ஷேமத்திற்கும் விரோதமான ஒரு கொள்கையானது தொலைக்கப்படும்."

## சரியான ஆயுதம்.

ஹிட்லரின் யோசனை சொல்பவர்கள் இவ்விதமாகத் தகவல்கள் கொடுத்து வந்துகொண்டிருக்க, யந்திரபலம் போதுமானவரைகொண்ட 120 பங்குகள் கொண்ட ஒரு பெரிய சைனியம் தயார் செய்யப்பட்டு கருங்கடல் முதல் பால்டிக் சமுத்திரம்வரை யுத்தம் செய்யவேணுமென்ற ஆத்திரத்துடன் காத்துக் கொண்டிருந்தது. ஜெர்மன் விமானப்படை பிரிடிஷ் விமானப்படையால் தோற்கடிக்கப்பட்டிருக்கலாம். ருஷ்யாவரை பிரிடிஷ் விமானப்படை வர முடியாது; ருஷ்ய விமானப்படை சங்கியை பெருத்திருக்கலாம், ஆனால் அதை எதிர்ப்பது சிரமமல்ல. கடலில் பிரிடிஷ் கப்பற்படைக்கு ஜெர்மன் படை உரைபோட காணாதுதான்; ஆயினும் தரையில் (சேதம் எவ்வளவானாலும்) சென்றவிடமெல்லாம் ஹிட்லரின் படைகளுக்கு வெற்றி; அவைகளை ஜயிக்க முடியாதென்ற பெயரும் வந்துவிட்டது. மேலும் அவன் ராணுவ இலாகா தலைவர்கள் தரை யுத்தத்தில் ஒரு புதுமுறை கண்டுபிடித்திருக்கிறார்கள்; அதை

எதிர்க்க மற்ற தேசத்தார் வழியொன்றும் கண்டுபிடிக்கவில்லை; அதாவது, "டாங்கு"களை முன்னுக்குவிட்டு கனம்மிக்க மோட்டார் பலங்கொண்டு சைனியங்களை பிரவாகமாகத் தாக்கிச்செல்வது என்றமுறை. போக்குவரத்து சாதனங்கள், கையிருப்பு சைனியங்கள் என்ற ராணுவ தத்துவங்களை இக்காலில் கெட்டியாக கையாளவேண்டியதில்லை. முதலில் வேகமாக எதிர்த்து, ஜீவாதாரமான எதிரி "குடலிற்கு" சமீபமுள்ள முக்கிய ஸ்தலங்களை ஜெர்மன் "பான்ஸர்" (Panzer) துருப்புகள் பிடித்துக்கொள்ளும். பலே! போகட்டும் சைனியங்கள்—எல்லா இடங்களிலும் தாக்காவிட்டாலும், நான்கு முக்கியமான குறிகளைவைத்து எதிர்க்கட்டும்; அவைகள் விழுந்தால் ருஷ்யர் வீராப்புப் பறந்துவிடும், அவர்கள் போக்குவரத்து சாதனங்கள், அவர்கள் சைனியங்களில் பெரும்பான்மை பாகம் எல்லாம் அழிந்துபோகும். ஜமாய்! செல்லட்டும் சைனியங்கள், லெனின்கிராட், மாஸ்கோ, கீவ், ஒடெஸ்ஸா இவைகளை நோக்கி!

ருஷ்ய எதிர்ப்பா—ருஷ்ய சிப்பாய் தைரியங்கொண்டவனாயிருக்கலாம், ருஷ்ய ராணுவ பலம் எண்ணிக்கைக்கு அகப்படாமலிருக்கலாம், அவர்களிடம் விமானங்களும் 'டாங்கு'களும் ஏராளமாக விருக்கலாம், ஆயினும் சில பேர்போன இடையூறுகளுண்டு. அதாவது, ராணுவ காரியங்களில் அரசியல் வாதிகள் தலையிடுவது, இருப்புப்பாதை வசதிக்குறைவு. 1904 (ருஷ்ய-ஜப்பானிய யுத்தகாலம்) முதல் 1939 (ருஷ்ய—பின்லண்டு யுத்தகாலம்) வரை வெளியானபடி ராணுவத் தலைமை அதிகாரிகளில் நைபுண்யக்குறைவு, பொதுஜன கட்டுப்பாடு, இவ்வித இடைஞ்சல்களெல்லாம் உண்டு. அவர்கள் தலைவர், ஸ்டாலினோ, பண விஷயங்களிலும், ராணுவ முறைகளிலும், அரசியல் தலைமை வகிப்பதிலும் எவரேனும் நைபுண்யமடைந்தால், அவர்களை வெளியே பிடித்துத்தள்ளி தன் அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொண்டவர். எச்சமயம் இந்த ஜோஸப் ஸ்டாலினை (Joseph Stalin) விரட்டி பதிலுக்குபதில் செய்யலாமென்று காத்துக்கொண்டிருப்பார் பலவர்க்கத்தார்!

இப்படியெல்லாம் எண்ணி எண்ணி முடிவிற்கு வந்தான் ஹிட்லர். பூமி கெட்டியாயிருக்கும்வரை போகவேண்டியவழி தூரமானாலும் ரஸ்தாக்கள் குறைவானாலும் யந்திரபலம் பொருந்திய ஜெர்மன் சைனியங்களுக்கு லட்சியமில்லை. அவர்கள் "டாங்கு" களும் "பான்ஸர்" களும் எவ்வித எதிர்ப்பையும் உடைத்துச் செல்லும்; இங்குமங்கும் திரும்பி, துறப்புகளில் விடப்பட்ட சைனியங்களை வளைத்துக்கொள்ளும். அப்படியே தலைநகரங்களையும், தொழிற்சாலைகளையும் நோக்கிச்செல்வார்கள்; பின்தொடர்ந்துவரும் ஜெர்மன் கூட்டங்கள் யூக்ரேனிலுள்ள கோதும்பையையும் எண்ணெயையும் கைவசமாக்கிக்கொண்டு, காகேஸிய மலைச் சாரலிலுள்ள எண்ணெயையும் கைவசமாக்கிக்கொண்டு, ஸோவியட் நாடுகளை ஜெர்மனிக்குக் கட்டுப்பட்ட பொம்மைகளை, தலைவர் அல்லது ராஜகுமாரர் அல்லது பிரபுக்கள் என்று பெயரிட்டு ஆட்டிவைத்து டாக்டர் லே (Dr. Ley) யின் பரிவாரங்களைக்கொண்டு ருஷ்ய தொழிலாளிகளை ஏவி, கெஸ்டாபோ (Gestapo) வைக்கொண்டு துப்பறிந்து வேலை செய்யும்படி நிர்பந்தித்து மனம் போன போக்கெல்லாம் போகலாம். இவையெல்லாம் ஹிட்லர் யோசனை.

எல்லாம் ஹிட்லர் எதிர்பார்த்தபடி நடந்ததோ என்னமோ, பெரும்பாடு பட்டு செலவிட்டு ஒரு மாதமாகியும் ஹிட்லருக்கு ஏதேனும் பலித்ததோ, சந்தேகந் தான். ருஷ்யத் துருப்புகள் சேதமானதைப்பற்றியும், ருஷ்யநாடுகள் பிடி பட்டதைப்பற்றியும், ருஷ்ய விமானங்கள், 'டாங்கு' கள், துருப்பு பங்குகள் சேதமானதைப்பற்றியும் ஹிட்லர் கொடுக்கும் கணக்குகள் நம்பத்தக்கவையல்ல; அதுபோலவே அவர் போட்டுக்கொண்டதாக சொல்லப்படும் காலவரை. ஆயினும், தன் குறிகளுக்குச்செல்லும் வழியிலுள்ள ஸ்தலங்களில் சண்டை நடப்பதென்பது நிச்சயம். பொலாட்ஸ்க், (Polotsk), மின்ஸ்க் (Minsk) கெம்மெனெட்ஸ் (Kemenetz), நீஸ்டர் நதி (The Dniester) எல்லாம் கடந்தாய் விட்டது; லெனின்கிராட், ஸ்மலென்ஸ்க், கீவ் சமீபித்துவிட்டன. இதில் அவனுக்கு ஏற்பட்ட சேதங்களைக் கணக்கிடமுடியாது. பத்து லக்ஷமென்கிறார்கள் ருஷ்யர்கள்; ஆனால், குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட குறிகளை அடைந்தால், பத்து லக்ஷம் பேர் செத்தாலென்ன, ஆயிரக்கணக்கான 'டாங்கு' களும் விமானங்களும் நாசமானாலென்ன?

"ஆனால்" என்பதை ஒத்துக்கொள்ளுகிறோம். யுத்த அறிக்கைகள் பரஸ்பர விரோதமாகவிருக்கின்றன. தூரதிருஷ்டிகள் பார்க்க இந்த யுத்தம் எப்படி இருக்கிறது என்று சொல்லுவது சாத்தியமில்லை. நமது நோக்கம் இதுதான். ஏதோ ஹிட்லர் செய்த காரியம் பெரும் பிசகு, இத்துடன் அழிந்தான், இனி, பிரிடன், இந்தியா, சாம்ராஜ்ஜியம் பூராவுமே ஹிட்லர் அடியோடு அழியும்வரை கவலையற்றிருக்கலாமென்று எண்ணுவது சரியல்லவென்பதை எடுத்துக்காட்டுவது தான் நமக்கு எண்ணம்.

## மற்றொரு விதமான விமர்சனம்.

இதற்கு முன் நடந்தவைகளை வைத்துக்கொண்டும், ஜெர்மானியர் ஜாதியி னுடைய காரியங்களை வைத்துக்கொண்டும் பார்த்தால் ஹிட்லர் ஒரு நாள் தோற்றுத்தான் போக வேண்டும். தைரியமோ, காரியங்களை நடத்துவதில் திறமையோ இல்லாமல் போனதாலல்ல. ஆனால் சுயமாக ஜாதிக்கு இயற்கையாக உள்ள தன்னைக்காட்டிலும் மேலானவர் கிடையாது என்ற ஒரு மமதையினால் தான். சென்ற யுத்தத்தில் அமெரிக்கர்களை சண்டைக்கு எப்படி வேண்டுமென்று இழுத்தார்களோ, எப்படி தாங்கள்தான் உலகத்தில் எல்லோருக்கும் எஜமானர்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்களோ, (இது இவர்கள் நடத்தைக்கே விரோதம்), எப்படி சமீபத்தில் வான் பேபனை விட்டு துருக்கி மூலமாக பிரிடனோடு சமாதானம் செய்து விடலாம் என்ற வீண் எண்ணம் கொண்டிருந்தார்களோ அதேமாதிரி ஹிட்லர் ருஷ்யாவின் தற்கால ராஜீய நிலைமையைச் சரியாக மதித்திருந்தாலும், ருஷ்யர்களின் மன ஊக்கத்தை சரியாக மதிக்கவில்லை என்று சொல்லக்கூடும். அவர் அம்மாதிரி எண்ணிவிட்டான் என்பதற்கு நல்ல காரணங்கள் இருக்கின்றன. அவர் அம்மாதிரி பிசகாக எண்ணி பிடிவாதமுள்ளவர்களும், ஏமாற்றமடையாதவர்களுமான ருஷ்யர்கள் தங்கள் ராஜ்ஜியம் எம்மாதிரி இருக்கவேண்டுமென்பதைப் பற்றி சர்ச்சை செய்வதைவிட்டு தன் தேசத்தைக்காப்பாற்ற முன் வந்தார்களேயானால் ஹிட்லரின் கால

அட்டவணை தடுமாறிவிடும். தங்களுக்கு வேண்டிய சாமான்கள் கிடைக்கக்கூடு மென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் களைத்துப்போன ஜெர்மானியர்களுக்கு வேண்டியதை சேகரிப்பதற்குள் பிரிடனின் முக்கிய ஆதாரமான அமெரிக்கா முழு பலத்துடனும் தீவிரத்துடனும் யுத்தத்தில் இறங்கிவிடும். இதனால் ஹிட்லர் ஓடும் பந்தயம் தோற்றுவிடும்.

## பிசகான எண்ணங்கள்.

ருஷ்ய யுத்தமுனையானது ஒரு நேர் கோடு போல் ஜெர்மானியர்களின் முதல் முறட்டுக் குத்தினால் கிழக்கே தள்ளப்பட்டு கிழக்கேயே போய்க்கொண்டிருக் கிறது என்று எண்ணக்கூடாது. அது ஒரு கட்டான் போட்ட பலகைபோலும். அந்தக் கட்டான்களுடைய வர்ணங்கள் அடிக்கடி மாறிக்கொண்டிருப்பதுபோலும் நடுவில் இடைவெளி உள்ளதுபோலும் நினைக்கப்படவேண்டும். யுத்த முஸ்தீபுக ளின் போக்குவரத்தைக்குறித்து வெகு நாளாக வழங்கிவரும் பழக்கங்களை ஜெர்மானியர்கள் தள்ளிவிட்டு முக்கியமான இடங்களைக் குறித்து தனித்தனியாக சேனைகளை அனுப்பி ருஷ்யாவின் நரம்பு போன்ற ஸ்தானங்களை அடிக்கலாம் என்ற ஆசைகொண்டிருக்கிறார்கள். பாலிஸ்டாக் என்ற இடத்தில் ஒரு தடவை அவர்கள் நாலாபக்கத்திலும் இருந்து 1,000 பெயர்கள் கொண்ட ருஷ்யா சைனியத்தைச் சுற்றிக் கொண்டதாகவும், ஆனால் அவர்களுடைய பான்ஸர் வகுப்புகள் நேராடிச் சென்றதாகவும் சொல்லுகிறார்கள். ஆனால் பிரான்ஸில் செய்தமாதிரி ஒவ்வொரு பிரிவிலும் வடக்கும் தெற்கும் திரும்பி ருஷ்ய சேனையைச் சுற்றிக்கொள்ளலாம் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கலாம். இம் மாதிரி செய்யமுடியுமா என்பதுதான் சந்தேகம்.

கீழேகண்ட நடுநிலைமைக்காரர்களின் அபிப்பிராயங்களைப் பார்த்தாலும் பெர்லின் ரேடியோவிலிருந்து வரும் சில செய்திகளையும் சேர்த்துப் பார்த்தால் இது சந்தேகம் என்றுதான் நாம் நினைக்கவேண்டி இருக்கிறது.

1. ஸ்டாலின் (Stalin) எங்கும் எரித்துவிட்டுப் போகும்படி உத்தரவிட்டி ருக்கிறார். அவர்களுடைய சேனைகள் ஜெர்மானியர்கள் சமீபத்தில் வரும் வரை காத்துக் கொண்டிருக்கக்கூடாது. அவர்கள் பின் வாங்கிக்கொண்டே ஒவ்வொரு எண்ணெய்ச் சேகரம், தானியக்களஞ்சியம், இன்னும் எதிரிகளுக்கு உபயோகப்படக் கூடியது எதுவாய் இருந்தாலும்சரி நாசம் செய்துவிட வேண்டும். சுருக்கமாக அவர்களுடைய எண்ணம் தன்னுடைய சேனைகளை யூரல் மலைகள் வரை பின் வாங்கும்படி செய்துகொண்டு ஆனால் உயிருடன் இருக்கும்படி செய்யவேண்டி யதுதான். என்றைக்காவது ஒருநாள் ஜெர்மானியர்கள் களைத்துத் தங்கள் தேசத் தைவிட்டுத் தள்ளி இருக்கும் பொழுது அவர்களை எதிர்ப்பதற்கு இந்த "தோற்ற" ருஷ்ய சேனை உபயோகப்படப்போகிறது.

2. இது சம்பாவிதம் என்று தோன்றுகிறது. ஏனெனில், இதற்கு முன் வெறும் பேச்சாகப் பேசிக் கொண்டிருந்த ஸ்டாலின் சமீபத்தில் தேச சேவை செய்யும்படி தன்னுடைய ஜனங்களுக்கு விடுத்திருக்கும் பேச்சை அவர்கள்

கேட்டு தங்களுக்குள் இருந்த அபிப்பிராய பேதங்களை விட்டு நாஸிக் கொள்கைக்கு விரோதமாக ஒன்று சேர்ந்து சண்டைபோடுவதாகத் தீர்மானித்து விட்டார்கள் என்று தெரிகிறது.

3. ஹிட்லரின் ராணுவ அதிகாரிகளுக்குத்தான் யோசனை ஜாஸ்தியென்றில்லை. ருஷ்யர்களின் யுக்திகளால் ஜெர்மானியருக்கு ஏராளமான சேத மேற்பட்டதுடன் எதிர்பாராத சம்பவங்களும் நடந்தன. அவைகளில் ஒன்று, முன் ஜாக்கிரதையாகவிருந்து ஜெர்மன் முன் அணியிலிருப்பவர்களைக் கீழே சாய்க்கிறது. 'டாங்க்' படைகளை எதிர்க்க 'டாங்க்' படைகள் வைத்திருந்தார்கள். நவீன ஜெர்மன் யுத்தமுறையை பலனில்லாமல் செய்யவேணுமானால், 'பான்ஸர்' பங்குகளுக்குள்ள எண்ணெய் முதலியவையெல்லாம் செலவழிந்து மேலே போக வொட்டாமல் போகும் வரை தங்கள் கையிருப்புக்களை, முக்கியமாக விமானப்படை கையிருப்புகளை, காபந்து செய்து வைத்திருப்பார்களே யானால் ஜெர்மன் ஜம்பம் பலிக்காது.

4. 'பிடிக்கப்பட்ட' ஸ்தலங்களுக்குப் பின் ருஷ்யர்கள் எதிர்பாராத விதமாக மறைவாயிருந்து தலைகிளப்பி வம்பு செய்கிறார்கள் என்று ஜெர்மன் ரேடியோ இடையிடையே முணங்குகிறது. ஜயித்து பிடித்த இடங்களில் மறுமுறையும் சண்டைக்கிழுப்பது என்ன நியாயம்! ஒரு விஷயம் ஸ்பஷ்டமாக புலப்படுகிறது, அதாவது ஹிட்லர் ஒழியும் வரை ஒவ்வொரு ருஷ்ய சிப்பாயும் விடாமல் சண்டையிடுவாரென்பது திண்ணம். தஞ்சமடைவார்களேயானால் தங்களுக்கு வந்துவிடும் அனர்த்தம் என்று ருஷ்யர்களுக்குத் தெரியும்; ஆகையால், சண்டை போடவேணும், பின்வாங்கவேணும், பிடிக்கவேணும், மறுபடியும் சண்டைபோடவேணும்; ருஷ்ய நாடுமுழுவதும் இழுத்து இழுத்துச்சென்று ஜெர்மன் இடுப்பை ஒடித்து அவர்கள் அசையமுடியாமல் போகும் வரை இப்படியெல்லாம் செய்யவேணும்.

முன்னே நடந்த ஏழு வருஷயுத்தத்தில் "ருஷ்ய சிப்பாய் செத்தாலும் சாவான், தோற்கடிக்கப்படமாட்டான்" என்ற பெயரைப்பெற்றான். இதற்கேற்க, பலே ஜோராக யுத்தம் புரிந்து வருகிறான்.

இது ருஷ்ய அதிகாரிகள், ஜனங்கள், சபைகள், ஸ்டாலின் முதலிய எல்லோருக்கும் தெரியும்; தாங்கள் தப்பவேணுமானால் ருஷ்ய சேனை விடாது சண்டை செய்து வரவேணுமென்று அவர்களுக்குத்தெரியும்.

ஹிட்லருள்பட உலகத்தார் எல்லோருக்கும் தெரியும், இந்த யுத்தத்தில் காலம் முக்கியமானதென்று. குளிர்காலம் வருவதற்குள் ஜெர்மானியர் ஜயிக்காவிட்டால் அவர்கள் தோல்வியடைந்தவர்களாவார்கள். இதுவரை இடம் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்; இது பெரும்பாலும் நாசமாக்கப்பட்ட நாடாயிருக்கும்; ஆனால் ருஷ்ய யந்திர சேனைகளில் ஜாஸ்திபாகம் அழிக்கப்படவில்லை; ருஷ்ய விமானப்படையை பங்கப்படுத்தவில்லை; "பாரசூட்" வேலை பலிக்கவில்லை; விழித்துக்கொண்டிருக்கும் ருஷ்யர்கள் ஜெர்மானியரைக் கொஞ்சம் கொஞ்சமாக கைதி செய்கிறார்கள்; எல்லாவற்றிலும் மேலாக, ருஷ்யர்கள்

ஜெர்மானியரை எதிர்த்துப்போர்செய்ய சமயம் பார்த்து வருகிறார்கள்; அதை ஜெர்மானியர் நிர்வகிப்பது துர்லபம்.

முடிவாக, சில ஜெர்மன் பத்திரிகைகளிலிருந்து சில முக்கிய செய்திகளைக் குறிப்பிடுகிறோம். ருஷ்யர்கள் "எல்லோரினும் வலுத்த விரோதிகள்" என்று ஒத்துக்கொள்ளப்படுகிறது. அவர்கள் நவீன ஆயுதபாணிகளென்றும், எதிர்த்து வருபவரை எதிர்ப்பதில் தீரரென்றும் ஒத்துக்கொள்ளப்படுகிறது. யூக்ரேனில் ஜெர்மன் துருப்புகள் மெள்ளச்செல்லுவதற்குக் காரணம் பனிப் புசலாம்! இவ்வித செய்திகள் பெர்லின் பத்திரிகைகளில் இதுவரை காணப்படாதவை. ஆயினும் ஜெர்மானியர் கவலைப்பட்ட நிலையைக்கண்டு நாம் திருப்தியடையக்கூடாது. நாம் முக்கியமாக மனதில் வைக்கவேண்டிய விஷயம் இது தான். அதாவது, ஆரம்ப சண்டைகளில் ஏராளமான துருப்புகள் நாசமடையலாம்; அப்படியானாலும், மாஸ்கோவிற்கு மேற்கிலோ, யூரல் மலையடிவாரத்திலோ, அசந்துபோன ஜெர்மானியரை சமயம் பார்த்து கீழேசாய்க்கும் விதமாக எதிர்த்துச்செல்ல லாயக்காக துருப்புகளென்ன, "டாங்கி" களென்ன, பீரங்கிகளென்ன, விமானங்களென்ன—விமானங்கள் தான் எல்லாவற்றிலும் முக்கியம்—போதுமான அளவிற்கு கையிருப்பாக வைத்திருப்பதைப் பொருத்தது இந்த யுத்தத்தின் வெற்றிகரமான முடிவு.

---

# ‘வி’

## விஜயத்துக்காக

**வி**ஜயமென்ற பதத்தின் முதலெழுத்தாகிய ‘**வி**’ யென்ற எழுத்து வெற்றியைக் காண்பிக்கும் குறியாக எடுக்கப் பட்டிருக்கிறது. இது **பிரிடிஷ் ஜயத்தையும், ஜனநாயக வெற்றியையும், வீரர்கள் வெற்றியையும், ஜெர்மானிய அசுரர்களைத் தொலைக்கும் வெற்றியையும்** காண்பிக்கிறது.

‘**வி**’ யென்பது கேவலம் பயமுறுத்துவதற்காக ஏற்படுத்திய உபாயமல்ல. கோடிக்கணக்கான ஜனங்கள் வெற்றியை நினைத்து வருகிறார்கள். இவர்களை ஒன்று சேர்க்கத்தான். ஹிட்லர் பிடித்த நாடுகள் கிளம்பி ஸ்வதந்திரம் பெற பிரமயம் வந்துவிட்டதையும் இது குறிப்பிடுகிறது.

சிறைப்பட்ட நாடுகள் ஸ்வதந்திரம் பெற அடைந்திருக்கும் மனோ திடத்தைக் காண்பிக்கவும், நாஸி கொடுங்கோல் தொலையவும் ஏற்பட்ட அடையாளமிதுவென்று மிஸ்டர் சர்ச்சில் சொல்லியிருக்கிறார்.

விஜய நாளில் ஜுலை 20-ம் தேதி நிசியில் ‘**வி**’ இயக்கம் பி. பி. ஸி. மர்ம-பிரஸங்கியாகிய கர்னல் பிரிட்டனால் துவக்கப்பட்டது.

இந்த ‘**வி**’ சைனியத்தில் சேர்ந்துகொள்ள வெற்றிக்குழைக்க சத்தியம் செய்துகொள்ளவேண்டும். எங்கெங்கே முடியுமோ அங்கெல்லாம் ‘**வி**’ அடையாளத்தை வைக்கவேண்டும். ‘**வி**’ சப்தத்தை தந்தி கொடுப்பதுபோல் தட்டிக்காட்டவேண்டும்.

இந்த இயக்கம் உலகமெல்லாம் பரவிவிட்டது. இந்தியர்களும் லக்ஷக் கணக்காகச் சேர்ந்துகொள்ளவேண்டும். நமக்கும், நமது குடும்பத்திற்கும் ஆபத்து நெருங்கிக்கொண்டிருக்கிறது.

**குறிப்பு:—**இதன் மற்ற விவரங்கள் ‘வார யுத்தச் செய்திகள்’ என்ற தலைப்பில் 17 & 18 பக்கங்களில் பார்க்கலாம்.

# வார யுத்தச் செய்திகள்.

## 17—7—41-லிருந்து 23—7—41-வரை.

## ருஷ்ய-ஜெர்மன் யுத்தம்.

ஓச்சொலொழிவில்லாது பிரமாதமாக நாலு வாரங்களாக சண்டை செய்தும் ஜெர்மனி மெள்ள மெள்ளத் தயங்கித் தயங்கி முன்போவதோடு, சைனியத்திலும், தளவாடங்களிலும் அபார நஷ்டத்தை அடைய நேரிட்டுவிட்டது. ருஷ்ய அணிகளைக் கலைக்க முடியவில்லை. இதற்குக் காரணம் பிரான்ஸைப் போல முக்கியத் தொழிற்சாலைகள் இங்கு நெருங்கியில்லாது பல விடங்களில், கிழக்கு பாகங்களில் ஜெர்மன் படைக்கு எட்டாது ஒதுங்கியிருப்பதுதான். ஆகவே ஜெர்மன் மின்னல் படையெடுப்பினால் தோல்வி ஏற்படவில்லை. பின்வாங்க நேரிட்டாலும், ருஷ்யத் துருப்புகள் காலி செய்யுமிடங்களை அழித்து விடுவதால், எதிரிகளுக்கு அனுகூலமில்லாமல் போகிறது. இப்படியேதான் நெபோலியன் அழிந்தது. ருஷ்யர் யுத்தத்தில் விடாமுயற்சியோடு, தந்திரத்தையும் காண்பிக்கிறார்கள். ஜெர்மானியர் தங்கள் டாங்கிகளைக்கொண்டு முன்னேறினால் அவைகளுக்குப் பின்னே வந்து போக்குவரத்து சாதனங்களை ருஷ்யர்கள் கெடுத்து விடுகிறார்கள். தெரியாதவிடங்களில் மறைந்துகொண்டு சுட்டுவிடுகிறார்கள். தளவாடங்களின் வரத்தைத் தடுத்துவிடுகிறார்கள். ருஷ்ய விமானங்கள் ஜெர்மன் விமானங்களை அடிக்கப் பார்க்கின்றன. ருஷ்யச் சிறு படைகள் ஓயாது எதிர்த்து வம்பு பண்ணுகின்றன. 'ருஷ்ய சாமான்களைக் கொள்ளை கொள்வதால் ஏற்படும் லாபத்தைவிட எங்களுடைய நஷ்டமதிகம்; வெற்றிகளால் பிரயோசனமில்லை' என்று ஒரு ஜெர்மன் தளகர்த்தர் சொல்லுகிறார். 'இதெல்லாம் ருஷ்யாவுக்கு ஒரு கொசுக்கடிதான். ருஷ்ய மண்ணில் மங்கோலியர் மாண்டதுபோல் ஜெர்மானியர் மண்ணோடு மண்ணுவார். உலகத்தை ஆளப் பேய் பிடித்து வந்தவர்கள் கெதி ருஷ்யாவில் இப்படியே முடிந்திருக்கிறது. இதற்கு முன் டாமர்லேன், செஞ்சிஸ்கான், நெபோலியன் அழிந்தபடியே ஹிட்லரும் அழிவார்' என்று நியூயார்க் டைம்ஸ் சொல்லுகிறது.

**ஜெர்மானியரின் கஷ்டங்கள்.**—ருஷ்யாவின் மேலெடுத்திருக்கும் எதிர்ப்பு தயங்குவதற்குக் காரணமேதோயிருக்கவேண்டும். துருக்கிக்குக் கொடுக்க வேண்டிய எண்ணெயைக் குறைக்கப்போவதாக ருமேனியா சொல்லுவதிலிருந்து எண்ணெய் பஞ்சமிருக்கவேண்டும். ஸ்வீடனுக்குப் போகும் கடற்பாதை தடைபட்டு, சாமான்கள் ஹாம்பர்க், ப்ரமென் வழி செல்லவேண்டியிருக்கிறது. கான்ஸ்டான்ஸா தகர்க்கப்பட்டதிலிருந்து அப்பிராந்தியத்துச் சரக்குகள் பர்காஸ் வழியும், சலோனிகா மார்க்கமாயும் போகவேண்டியிருக்கிறது. ஸைபீரியா ரயில் பாதை அடைபட்டதிலிருந்து ஆசியாவிலிருந்து சரக்குகள் வர துருக்கி மார்க்கமொன்றுதான் இருக்கிறது. சைனியங்கள் போராது, உபசைனியங்களுக்காக ருமேனியாவையும், இதாலியையும் ஹிட்லர் கேட்டிருப்பதாகப் பிரஸ்தாபம்,

**ஸ்டாலின் கால்வாய்.**—லெனின்கிராடிலிருந்து, லடோகா, ஒனீகா ஏரிகள் வழியாக வெண்கடலுக்குப் போகிறது. ஜெர்மானியர் எஸ்டோனியாவைப் பிடித்துக்கொண்டு, லெனின்கிராடை நோக்கினால் ருஷ்ய சண்டைக் கப்பல்கள் பால்டிக்கில் அடைபட்டுவிடுமென்று யோஜித்து, இந்தக் கால்வாயின் வழியாக இப்படையைச் சேர்ந்த நீர்மூழ்கிகளை அப்புறப்படுத்திவிட்டார்கள். ஜெர்மானியர் கால்வாயைத் தகர்த்து பழுதாக்கியும், ஒரு நீர்மூழ்கியைத் தவிர மற்றவை யெல்லாம் வெளிப்படுத்தப்பட்டன.

**தற்போதிய நிலைமை.**—மாஸ்கோவிலிருந்தும், லண்டனிலிருந்தும் கிடைத்த ஜுலை 22-ம் தேதி செய்திப்படி லெனின்கிராட், மாஸ்கோ, கீவ்வை நோக்கி யுத்தம் நடக்கிறது. நீபர் நதி வளைவில் ருஷ்ய சைனியங்களை வளைத்துக்கொள்ள ஜெர்மானியர் முயற்சிக்கிறார்கள். லெனின்கிராட்டுக்குப் போக முடியாதபடி பெய்பஸ் ஏரிக்கரையில் ஜெர்மானியர் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். லடோகாவுக்கும், ஒனீகாவுக்கு மத்தியில் ஜெர்மானியர் புதிதாயொரு எதிர்ப்பைத் துவக்கியிருக்கிறார்கள். பெட்ரோஸா வாட்க்ஸில் சண்டை நடப்பதாக முதல் முதலாக இப்பொழுது அறிவிக்கப்படுகிறது. ப்ஸ்கோவ், பொலோட்ஸ்க், நெவல், ஸ்மலென்ஸ்க், நவோகிராட்—வாலின்ஸ்கில் பலத்த சண்டை. ஸ்மலென்ஸ்க்கையும், கீவ்வையும் ஜெர்மானியர் இன்னும் பிடித்ததாகக்காணோம்.

**விமான எதிர்ப்பு.**—20, 21-ல் லெனின்கிராட் மேலும், 21, 22-ல் மாஸ்கோ மேலும் விமான எதிர்ப்பு நடந்தது. ஜெர்மானியர் மாஸ்கோவை த்வம்ஸம் செய்து விட்டதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஸ்டாலின், ஏதோ இரண்டு ஒரு விமானங்கள் தனித்து வந்ததாகச் சொல்லுகிறார். ராயிடர் விசேஷ நிருபர் சொல்லுகிறபடி, நடுத்தர-மின்னல் எதிர்ப்பென்று இதைச் சொல்லலாம். மாஸ்கோவின் தற்காப்பு பலமாயிருப்பதோடு, ஜெர்மன் விமான நிலயங்கள் வெகுதூரத்திலிருக்கின்றன, வழக்கம்போல் ஜெர்மானியர்கள் கொள்ளிகளைப்போட்டார்கள். ருஷ்ய நில-பீரங்கிகள் திருப்பிச் சுட்டன. வாணவேடிக்கைக்குக் குறைவில்லை.

**ஐரோப்பிய சைனியம்.**—ருஷ்ய ஜன சமத்துவக்கொள்கையை எதிர்க்க ஹிட்லர் படைதிரட்டுவதெல்லாம் வீணாயிற்று. நார்வேயில் 38 பேர்களும், பிரான்ஸில் 5, 6 பேர்களும்தான் சேர்ந்தார்கள். ஸ்பெயினில் பேருக்குத்தான்.

## தூரக்-கிழக்கு.

இங்கே யுத்தம் வரும்போலிருக்கிறது. திடீரென்று 16-ம் தேதியன்று ஜப்பானில் மந்திரிசபை ராஜீநாமா செய்தது. தேசிய, உலக நடவடிக்கையை யொத்து நடக்க பலத்த புதுசபையொன்றை அமைக்கப் போவதாகச் சொல்லப்பட்டது. 48-மணி நேரம் கலந்துபேசி, 'கவனித்து தாமதித்துக் காரியங்களை நடத்த' புதுசபையொன்று பழைய பிரதம மந்திரி ராஜகுமார் கோனோயாவின் தலைமையிலேயே, மறுபடியும் (இது மூன்றும் தடவை) அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சபையில் மத்ஸுவோகாவைக் காணோம். இந்தப் புது அமைச்சர் சபை செய்யப் போவதென்னவென்று புரியவில்லை. இதில் முதலாளிகளிருப்பதால் ஜப்பான் ஐரோப்பிய சிக்கலிலிருந்து விடுவித்துக்கொள்ளப் பார்க்குமென்பது

ஒரு அபிப்பிராயம். ராணுவஸ்தர்கள் பலிருப்பதிலிருந்து சண்டை வருமென்று சிலர் நினைக்கிறார்கள். மத்ஸுவோகா ராஜிநாமா செய்த காரணம் தெரியவில்லை. மூவரசு ஒப்பந்தத்திலும், ருஷ்ய ஒப்பந்தத்திலும் ஜப்பானை மாட்டிவிட்டது இவர்தான். இவர் ராஜிநாமாவிலிருந்து இந்த சிநேகங்களுக்கு மாறுதல் ஏற்படுமா? சிலர், ஜப்பான் வடக்கேயும், சிலர் தெற்கேயும் சண்டையைத் துவக்கும், சைனாவோடு சண்டையை சற்று நிறுத்திக்கொள்ளுமென்கிறார்கள்.

இது இப்படியிருக்க இந்து சைனாத்தலைவர் திடீரென்று ஜப்பானுடைய ராணுவ-கோஷ்டியிருக்கும் ஹனாயிக்கு வந்திருக்கிறார். இங்கே, ஸிரியாவைப் போல் வம்பு ஏற்படுமோ, என்னமோ? பிரிடனும், அமெரிக்காவும் சேர்ந்து கொண்டு, தாய்லாந்திலும், இந்து சைனாவிலும் தலையிடப் பார்ப்பதாக, நாஸிகளைப் போல நிஷிநிஷி ஷிம்பன் என்ற ஜப்பானியப் பத்திரிகை கட்டிவிட ஆரம்பித்து விட்டது. ராஜகுமார் கோனோயா பத்திராதிபர்களோடு பேசவிருந்த சபையொன்று கூட்டப்படவில்லை. ஜப்பானிய கப்பல்கள் அமெரிக்காவிலிருந்து திருப்பி கொண்டுவரப்படுகின்றன. ரேடியோ தந்திச் செய்திகளெல்லாம் ஜப்பானில் அடக்கி ஆளப்படுகின்றன. கடைசியாய் கிடைத்திருக்கும் செய்திப்படி ஜப்பான், இந்து சைனாவைப்பற்றி விஷிக்கு ஒரு யுத்த எச்சரிக்கை கடிதம் அனுப்ப, ரர்ணுவ நிலயங்களை விஷி கொடுத்துவிட்டதாகத் தெரிகிறது.

இந்து சைனாவில் பிரிடன் பிரவேசிப்பதாகச்சொல்லும் வதந்தியானது சிங்கப்பூரில் மறுக்கப்பட்டிருக்கிறது.

ஜுலை 18-ல், பிரான்ஸிஸ்கோவிலில் பேசும்போது ஹாலிபாக்ஸ் பிரபு ஜப்பான் விஷயமாக பிரிடன் கொண்டிருக்கும் நோக்கத்தை வெளியாக்கினார். பிரிடனும், அமெரிக்காவும் பஸிபிக்கில் சமாதானத்தைக் கைக்கொள்ளத்தான் விரும்புகின்றன. இங்கிலாந்துக்கும் ஜப்பானுக்கும் சண்டைவரக்காரணமில்லை. ஆனால் பிரிடன் பஸிபிக்கிலிருக்கும் தன்னுடைய ஸ்வதந்திரங்களை விட்டுவிடாது.

## ஜெர்மனியைப் பிடிக்கச் சண்டை.

ஏராளமான சைனியங்களையும், தளவாடங்களையும் ருஷ்யப்போர் முனையில் விரயம் செய்துகொண்டிருக்கும் இச்சமயத்தில், அதன் மேற்குப் புறத்தில் பிரிடிஷ் விமானங்கள் தகர்த்துக்கொண்டிருக்கின்றன. இவ்விதம் ஜெர்மனி இருபுறமும் நஷ்டத்துக்குள்ளாவதுதான் ஜெர்மனியைப் பிடிக்கும் சண்டையின் துவக்கம். கடும் விமானப்போர் துவக்கிய பின் முதல் மூன்று வாரங்களில் பிரிடன் நடத்தியிருக்கும் விமானப்போர் விவரத்தைக் கீழே பார்க்கலாம்:— எண்ணிக்கைகள் எவ்வளவு தடவைகள் தாக்கப்பட்டனவென்று குறிக்கின்றன.

### ஜெர்மனியில்.

ப்ரமென் 9, கீல் 5, வில்ஹெல்ம்ஷாவன் 4, பிரமெர்ஹேவன் 3, வெகர்ஸாக் 1, கக்ஸ்ஹேவன் 1, எம்டன் 5, ஹாம்பர்க் 1, கொலோன் 11, டஸல்டார்ப் 1, டூயிஸ்பர்க் 4, ஹனேவர் 1, ஓல்டன்பர்க் 3, ஆஸ்னபுருக் 2, பீல்பெல்ட் 2, எஸ்ஸன் 2, மாக்டிபர்க் 1, ரீன் 1, மன்ஸ்டர் 4, டார்ட்மண்ட் 1, மன்சன் கிளாட்பாக் 1, பிராங்க்பர்ட் 1, கிரெபெல்ட் 1, ரெயிட் 1, ஹாம் 1, ல்யூனு 1.

### கைவச நாடுகள்.

புலாயின் 7, டங்கர்க் 4, ராடர்டாம் 4, ஆஸ்டெண்ட் 1, ஷெர்பர்க் 4, ப்ரஸ்ட் 4, லெ. ஹாவர் 1, கலே 2, டென்ஹெல்டர் 3, டெர்ஷெல்லிங் 1, லோரியான் 1, கிரிஸ்டியான்ஸண்ட் 1, ஹாக்ஸண்ட் 2, ஹாயஸ்ப்ரக் 3, பெதூன் 4, காமினெ 2, லென்ஸ் 1, லிலே 5.

ஜூன் 16-லிருந்து ஜூலை 10-க்குள்ளாக ரூர் பிரதேசத்தில் 2,000 டன் வெடிகளும், கொலோன் மேல் 1,000 டன் வெடிகளும், ப்ரெமன் மேல் 500 டன்களும் போடப்பட்டன. பிரிடிஷ் விமானங்களால் ஏற்படும் விபத்தைத் தடுத்துக் கொள்ளுவதற்காக ருஷ்யப்போர் முனையிலிருக்கும் விமானங்களைத் திருப்பி ஜெர்மனிக்குக்கொண்டு வர நேரிட்டு, அதிலிருந்து ருஷ்யாவில்படும் சண்டை தளர்ச்சியடைகிறது. நடப்பு வாரத்தில் ஹாம்பர்க், பிரேமென், டஸல்டார்ப், சானல் துறை முகங்கள், பாலர்மோ, ஸிஸிலி, நேபிள்ஸ் முதலிய இடங்கள் தாக்கப்பட்டன. ஆனால் இனித்தான் பிரிடிஷ் எதிர்ப்பு கடுமையாக்கப்படும். ஹாலிபாக்ஸ் பிரபு சொல்லியபடி வரப்போகும் 6-மாதங்களில் இந்தப்போர் அதிகரிக்கும். ஹிட்லர் பிரிடனை யெதிர்த்ததைக் காட்டிலும் அதிகமாக ஜெர்மனி தாக்கப்படும்.

### கடற்சண்டை.

—**அட்லாண்டிக் சண்டை.**—இந்தச் சண்டை நீடிக்குமென்றும், இனித்தான் கடும்போர் ஏற்படுமென்றும் கடற்படை இலாகா மந்திரி மிஸ்டர் எ. வி. அலெக்ஸாண்டர் ஜூலை 16-ல் பேசினார். மத்தியதரைக்கடலில் பிரிடிஷ் சைனியங்களையும் தளவாடங்களையும் கப்பற்படை பத்திரமாய் கொண்டுபோய்ச் சேர்த்துக் கொண்டிருப்பதோடு அட்லாண்டிக்கில் வர்த்தகக் கப்பல்களையும் காப்பாற்றி வருகிறது. அட்லாண்டிக் போர் இடைவிடாது நடக்கிறது. ஆனால் எப்பொழுதும் ஆபத்துத்தான். அசந்தால் மோசம் வந்துவிடும். ஆனால் இப்பொழுது நமக்கு முன்னேயிருந்ததைவிட துணைக்கப்பல்களதிகம். கடற்கரை விமானங்களும், அமெரிக்க விமானங்களும் உதவுகின்றன, ஜெர்மனியினுடைய கப்பல் நிலயங்களையும், கப்பல்களையும், வழிகளையும் பிரிடிஷ் விமானங்கள் தாக்குகின்றன. மேலும் ஜெர்மன், இதாலியக் கப்பல்கள் ஏராளமாய் கவிழ்க்கப்படுகின்றன.

### அமெரிக்காவில் தளவாட உற்பத்தி.

ஒரு நாளைக்கு ஒரு கப்பல்வீதம் கட்டினால் எதிரி ஓடத்தான்வேண்டும் ஜூலை 10 ஒடு முடிவான 40 நாட்களில், நாளொன்றுக்கு ஒரு கப்பல்வீதம் அமெரிக்காவில் கட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். வரும் எப்ரலுக்குள் ஜெர்மனியை விட அதிகமாக விமானங்களையும், டாங்கிகளையும் அமெரிக்கா கட்டிவிடும். ஜூலை 18ல், கடன்—குத்தகை இலாகா, மேலதிகாரியான மிஸ்டர் ஹாரி ஹாப்கின்ஸ் சொன்னதாவது :—

'இதுவரையில் கேழ்விப்படாத ஏராளமான கப்பல்களைக்கட்ட திட்டம் போட்டுவிட்டோம். இங்கிலாந்துக்கும், மற்ற ஹிட்லரை எதிர்த்துநிற்கும் ஜனநாயக நாடுகளுக்கெல்லாம் தளவாடங்களையனுப்ப போதுமான கப்பல்களைக் கட்டிவிடுவோம்.'

'புது விமானங்களைக்கட்ட பலத்த ஏற்பாடுகளாகிக் கொண்டிருக்கின்றன.'

'பிரிடனும் அமெரிக்காவும் சேர்ந்து ஜெர்மனியைவிட அதிக விமானங்களையும், சிறந்த விமானங்களையும் கட்டிவிடுவோம்.'

'இதிலிருந்து சர்வாதிகாரிகள் திகைத்துப்போய்விடுவார்கள். அந்தப் பயல்களை சாட்டைகொண்டடிப்போம்.'

**அமெரிக்காவில் ராணுவ சேவை நீடிக்கப்படப்போகிறது.**—யுனைடட் ஸ்டேட்ஸில் ஒருவருஷ சேவைக்கென்று ராணுவத்துக்கு ஆட்கள் திரட்டப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடைய ஊழியகாலத்தை அதிகப்படுத்தவேண்டுமென்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் காங்கிரஸ் சபையைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். உலகநிலை சென்ற வருஷத்தைக் காட்டிலும் இப்பொழுது சீர்குலைந்துவிட்டது. ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியாகண்டங்களில் ஜெர்மனி திட்டம்போட்டுக்கொண்டு அபகரித்து வருகிறது. உடன்படிக்கைகளெல்லாம் தூளாய்போயின. மேலும் அமெரிக்கா கண்டத்திலுள்ள நாடுகளைக்காப்பாற்றும் பொறுப்பு யுனைடட்ஸ்டேட்ஸுக்கிருக்கிறது. அவைகளை கைவிடுவது நம்பிக்கை மோசமாகும்.

**பொலிவியாவிலிருந்து நாஸி மந்திரியை விலக்கியாய்விட்டது.**—ஜெர்மன் மந்திரியின் சூழ்ச்சியால் பொலிவியாவில் அரசாங்கப் புரட்சி யேற்படுமென்று தெரிந்து இந்த உத்தியோகஸ்தரை 24 மணி நேரத்துக்குள் புறப்பட்டுப் போய்விடவேண்டுமென்று உத்தரவுபோடப்பட்டு அவரும் புறப்பட்டுவிட்டார். இதிலிருந்து ஏதாவது சங்கடங்கள் நேர்ந்தால் போலிவியாவுக்கு உதவி செய்வதாக யுனைடட் ஸ்டேட்ஸ் வாக்களித்திருக்கிறது.

**யுனைடட் ஸ்டேட்ஸில் இந்திய ஏஜண்ட்.**—யுத்த நெருக்கடியால் ஏற்பட்ட அவசியத்தால், இந்தியாவுக்கும், யுனைடட் ஸ்டேட்ஸுக்கும் பரஸ்பரம் ஏஜண்டுகளை நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனரபிள் ஸர் கிரிஜா சங்கர் பாஜபாய் யுனைடட் ஸ்டேட்ஸில் இந்திய ஏஜண்டாகவும், மிஸ்டர் மர்ரே வில்ஸன் இந்தியாவில் யுனைடட் ஸ்டேட்ஸ் ஏஜண்டாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு மந்திரிகளின் அந்தஸ்துண்டு.

**மிஸ்டர் டப் கூபர்.**—அறிக்கை இலாகாவிலிருந்து மாற்றப்பட்டு, தூரக்கிழக்கில் ராணுவ, அரசியல் காரியங்களை ஒற்றுமைப்படுத்த வேண்டிய ஏற்பாடுகளை ரிபோர்ட் செய்ய இவர் அனுப்பப்பட்டிருக்கிறார்.

**வைஸிராயின் நிர்வாக சபை விசாலப்படுத்தப் பட்டிருக்கிறது: தேசிய தற்காப்புக் கவுன்ஸில்.**—வைஸிராயின் நிர்வாக சபை விசாலப்படுத்தப்பட்டு அதிலிப்பொழுது 8 உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தினரடங்கியுள்ளார்கள். இதோடு, இந்திய ஸமஸ்தானங்கள், தொழில், வியாபார, ராணுவ, சிறுவகுப்பினர், பிரதிநிதிகளடங்கிய 30 மெம்பர்கள் கொண்ட தற்காப்பு சபையொன்று நியமிக்கப்பட்டு, இரண்டு மாதங்களுக் கொருமுறை ரகஸ்யமாக வைஸிராயின் தலைமையில்கூடும். இந்த சபை ராஜதானிகளில் நடக்கும் யுத்த முயற்சிகளை மேல் அரசாங்க

முயற்சியோடு இணைத்துவைக்கும். இந்த மாறுதல்கள், இப்பொழுதிருக்கும் அரசியல் திட்டத்துக்குள்ளடங்கி, இனி ஏற்படக்கூடிய அரசியல் மாறுதலுக்கு தடையாய் நிற்காது வேலை செய்யும் யுத்த காரியங்களைப் பார்க்கும். அதிலிருந்து அரசியலும் மாறலாம். இந்தியர்கள் அதிகமாயுள்ள இந்த யுத்த அமைச்சர் சபையிலிருந்து வைஸிராய் பொதுஜன அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளுவார்.

**விஜயத்துக்கு 'வி' குறிப்பு.**—ஜெர்மானியர் பொது ஓய்வு நாளாய் வைத்த ஜூலை 20-ம் தேதியன்று 'வி' இயக்கத்தை பி. பி. ஸியின் மர்ம பிரசங்ககரான கர்னல் பிரிட்டன் தொடுத்தார். இவர் யாரென்று தெரியவில்லை. சிலர் ராணுவ ரகஸ்ய சமாசார உத்தியோகஸ்தரென்கிறார்கள்; சிலர் அன்னிய இலாகா விமான ஆலோசகரென்கிறார்கள்; சிலர் விமான இலாகாவின் அன்னிய ஆலோசகர் என்கிறார்கள். பி. பி. ஸி. ஒன்றும் சொல்லமாட்டேனென்கிறது. 'வி' இயக்கம் பயமுறுத்தக் கிளப்பிவிட்ட பொய்யல்ல. உலகத்தில் ஸ்வதந்திரத்தைக்கோரி, நாஸிகள் ஒழிய வேண்டுமென்று எண்ணுபவர்களடங்கிய படையைக்கிளப்பும் இயக்கம். ஹிட்லர் கைவசப்படுத்தியிருக்கும் அடிமை ஜனங்கள் கலகம் செய்து ஸ்வதந்திரத்தைப் பெறவிருந்த இயக்கம்.

'வி' என்பது 'விஜயம்'. ஜெர்மன் அசுரர்களை தொலைத்து வெற்றிபெற வீரர்கள் சேரும் இயக்கம்.

ஜூலை 20-ம் தேதி நிசியில் மிஸ்டர் சர்ச்சில் அனுப்பிய ஒரு செய்தியை வாசித்து, கர்னல் பிரிட்டன் இந்த இயக்கத்தை பி. பி. ஸியில் பேசித் துவக்கினார். மிஸ்டர் சர்ச்சில் அனுப்பிய செய்தியாவது:—'வி' யானது நாஸிகளை தொலைக்க நிற்கும் குறி; ஐரோப்பாவை விடுவிக்க பிடிபட்ட நாட்டார்களின் மனோ பலத்தைக் காண்பிக்கும் குறி.

'வி' படை எழுப்பப்பட்டு, கோடிக்கணக்கான மக்கள் சேரப்போவதாக கர்னல் பிரிட்டன் பி. பி. ஸி. ரேடியோவில் தெரிவித்தார். இப்படையில் சேருவதற்கு நாஸிகளைத் தொலைக்க மனதில் சபதம் செய்துகொண்டு, 'வி' குறியை கண்டவிடங்களில் வரைவதும்; தந்தியடிக்கும் சப்தங்களால் 'வி' தொனியைத் தட்டிக் காண்பிப்பதும்தான்.

இந்த இயக்கம் உலகமெல்லாம் பரவி விட்டது. சுவர்கள், ரயில்வே ஸ்டேஷன்கள், வண்டிகள், போஜன டிக்கட்டுகள்—முதலியவைகளிலெல்லாம் 'வி' எழுதப்பட்டிருக்கிறது. ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா கண்டங்களிளெல்லாம் காணப்படுகிறது. பத்திரிகைகளும், ரேடியோக்களும் இதில் சேர்ந்து கொண்டன.

ஜெர்மானியர் பிடித்து வைத்திருக்கும் நாடுகளில் இது விசேஷமாய் பரவியிருக்கிறது. ஆம்ஸ்டர்டாம், ராட்டர்டாம், ஹேக் முதலானவிடங்களில் 'வி' கொடிகள் பறக்கின்றன. பெல்ஜியத்தில் வண்டிகளிளெல்லாம் 'வி'க்குறி போடப்பட்டிருக்கிறது. பாரிஸில் எய்பல் கோபுரத்திலும், ஆஸ்லோ நகரத்திலும் 'வி'க் கொடிகள் பறக்கின்றன. ப்ராக், க்ராகாவ், வார்ஸா நகரங்களில் பத்திரிகைகளிலும், சினிமாக்களிலும், வண்டிகளிலும் காணப்படுகின்றன.

ஜெர்மானியர் திகைத்துப்போய் ‘வி’ அடையாளம் தங்களுடைய வெற்றியை குறிக்கிறது என்கிறார்கள்.

ஆனால் ஜெர்மனியில் ‘வி’ என்றால் வான்ரிப்பன்ட்ராப், வான்பேபன், கிராம்யம், கொடுமை, பலி, கிருமிகளைக்காட்டும் பதங்களாகும்.

தங்களுக்கேற்பட்டிருக்கும் அவமானத்தை மறைக்க ‘வி’ தங்களுடைய வெற்றியின் அறிகுறியென்கிறார்கள். அவர்களுடைய பாஷையில் ‘சீக்’ (seig) என்பது தான் வெற்றியைக் குறிக்கும்மொழி.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **14—7—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | காலையில்.—கப்பல் துறைகள், கப்பல்கள், ரயில்வே ஸ்டேஷன், சாமான் ரயில் நிற்குமிடங்கள், ஒரு தொழிற்சாலை.—செர்பர்க் (Cherbourg). | ...... | ஒரு 6,000 டன் கப்பல் தீக்கிரையாகியது. ரயில்வே ஸ்டேஷன் சேதமாயிற்று. தீப்பிடித்தது. |
| | கப்பல் துறைகள், கப்பல்கள், ரயில் வண்டிகள் நிறுத்தப்படுமிடங்கள்.—லாஹார் (Lehavre). | 6 விமானங்கள். | சேதமாயிற்று. |
| | ரயில் வண்டிகள் நிறுத்தப்படுமிடங்கள்.—ஹேஸ்ப்ருக் (Hazebrouek). | 2 விமானிகள் பத்திரமாயிருக்கிறார்கள். | 8 விமானங்கள். |
| | பிற்பகலில்.—துணைக்காவலுடன் கூடிய கப்பல்கள்.—டச்சு ப்ரிஸியன் (Frisian) தீவுகள். | நஷ்டமில்லை. | 3 கப்பல்கள் தாக்குண்டன. 1 விமானம். |
| | இரவில்.—கப்பல் துறைகள்.—ப்ரமன் (Bremen). | ...... | தீப்பிடித்தது. |
| | தொழிற்சாலைகள்.—ஹானோவர் (Honover). | ...... | சேதமாயிற்று. |
| | கப்பல் துறைகள்.—ராட்டர்டாம் (Rotterdam). | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 14—7—41. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | பல இடங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (Germany). | ...... | ...... |
| | **இதாலி (Italy).** | | |
| | இதாலியத் துறைமுகம்.–மெஸ்ஸினு (Messina). | ...... | ...... |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | விமான நிலயங்கள்.—எலூஸிஸ் (Elusis), ஹஸ்ஸானி (Hassani). | ...... | பெருந்தீக்கள் கிளம்பின. |
| | **கிரீட் (Crete).** | | |
| | விமான நிலயம்.–ஹெராக்லியான் (Heraklion). | ...... | சேதமாயிற்று. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | பெங்காஸி (Benghazi), டெர்னு (Derna), பார்டியா (Bardia). | ...... | ...... |
| | ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.—கொண்டார் (Gondar) பிரதேசம். | ...... | ...... |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | தரையிலிருக்கும் விமானங்கள், விமான நிலயங்கள், மோட்டார் துருப்புப்படைகள்.—யுத்த அரங்கமுழுவதும். | ...... | ...... |
| | **ருமேனியா (Rumania).** | | |
| | புகாரெஸ்ட் (Bucharest). | ...... | ...... |
| 15—7—41. (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | இரவில்.—தொழிற்சாலைகள்—வடமேற்கு ஜெர்மனி (Germany). | ...... | 1 விமானம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமானச் சண்டை.—லிபியா (Libya)வின் கடற்கரை. | ...... | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; விமான நஷ்டம். | எதிரிகளின் படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **15—7—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | |
| **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| மோட்டார் படைகள் | ...... | ...... |
| **ருமேனியா (Rumania).** | | |
| எண்ணெய்ச் சுரங்கங்கள்.—ப்ளோயஸ்டி (Ploesti). | ...... | பெருந்தீ சூழ்ந்தது. |
| **16—7—41.** (புதன்கிழமை). | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| காலையில்.—ஒரு விரோதிச் சாமான் கப்பல் பிரான்ஸின் வடமேற்குக் கடற்கரை. | ...... | தாக்குண்டு மூழ்கடிக்கப்பட்டது. |
| பிற்பகலில்.—விரோதிக் கப்பல்கள்—ராட்டர்டாம் (Rotterdam) கப்பல் துறைகளில். | ...... | 4 பெரிய கப்பல்களும், 2 சிறிய கப்பல்களும் தாக்குண்டன. தீக்கள் கிளம்பின. |
| சாமான் கிட்டங்கிகள்.—ராட்டர்டாம் (Rotterdam). | ...... | ...... |
| மாலையில்.—விரோதி எண்ணெய்க் கப்பல்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | ...... மூழ்கடிக்கப்பட்டது. |
| இரண்டு சாமான் கப்பல்கள்.—பிரான்ஸி (France)ன் மேற்குக் கடற்கரை. | ...... | சேதமாயிற்று. |
| விரோதி சாமான் கப்பல்.—நார்வே (Norway) கடற்கரை. | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |
| இரவில்.—தொழிற்சாலைகள் நிறைந்துள்ள பிரதேசங்கள்.—ஹாம்பர்க் (Hamburg). | ...... | தீயும், வெடிச் சத்தமும் கேட்டன. |
| கப்பல் துறைகள், சாமான் கிட்டங்கிகள்.—புலாயின் (Boulogne). | 3 விமானங்கள். | ...... |
| மற்ற முக்கியமான இடங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (Germany). | ...... | ...... |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும், |
|---|---|---|
| **16—7—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | |
| **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| துணைக்காவலோடு விரோதிக் கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli) கடற்கரை. | ...... | 1 கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. மற்றொன்று சேதமாயிற்று. |
| விரோதிக் கப்பல், எண்ணெய்க் கப்பல், துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli) | ...... | எண்ணெய்க் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |
| சிறிய துறைமுகங்கள், நிலக்கரி கிட்டங்கிகள், ரயில் வண்டிகள் ரிபேர் செய்யுமிடங்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | தீப்பிடித்தது. |
| சைனியங்கள் வசிக்குமிடங்கள், மின்சார உற்பத்திசாலை, ராணுவ மோட்டார்கள் வைக்குமிடங்கள்.—டெர்ணு (Derna). | ...... | தீயும், வெடிச்சத்தங்களும் கிளம்பின. |
| பார்டியா.—(Bardia). | ...... | ...... |
| **ருஷ்ய விமானங்களால்.** | | |
| **கிழக்குப் போர்முனை.** | | |
| தரையிலிருக்கும் விமானங்கள், விரோதி மோட்டார் படைகள்.—போர்களம் முழுவதும். | ஜூலை 15, 16 தேதிகளில் 23 விமானங்கள். | ஜூலை 15, 16 தேதிகளில் 98 விமானங்கள். |
| **17—7—41.** (வியாழக்கிழமை). | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| பகலில்.—படையெடுப்பு—வட பிரான்ஸ் (France). | ...... | ...... |
| காவல் புரிதல்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | 6 விமானங்கள். | 9 விமானங்கள். |
| இரவில்.—தொழிற்சாலைகள்—ரைன்லாந்தும் (Rhineland), முக்கியமாக கொலோன் (Cologne). | ...... | எங்கு பார்த்தாலும் ஒரே தீமயம். |
| 4,000 டன் நிறையுள்ள கப்பல்.—ஸெயிண்ட் நாஸேர் (St. Nazaire). | ...... | ...... |
| விமான நிலயங்கள்.—ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகள். | 1 விமானம். | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ்; நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 17—7—41. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலி (Italy).** | | |
| | கடற்படை நிலயம், யுத்தக் கப்பல்கள்.—பாலர்மோ (Palermo). | ...... | ஒரு யுத்தக் கப்பல் தாக்குண்டது. |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | விமான நிலயங்கள்.—ஜெர்பினி (Gerbini) அகஸ்டா (Augusta). | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம்.—டெர்ணா (Derna). | ... | தீயும், வெடியும் |
| | துறைமுகம், கப்பல்கள்.—பார்டியா (Bardia). | நஷ்டமில்லை. | கிளம்பின. |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி சைனியங்கள்.—போர்கள முழுவதும். | 6 விமானங்கள். | 39 விமானங்கள். |
| 18—7—41. (வெள்ளிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—கப்பல்கள்—பிரெஞ்சு (French)க் கடற்கரை. | ... | 1 விமானம். |
| | ஒரு சாமான் கப்பல்.—டன்கர்க் (Dunkirk). | 3 விமானங்கள். | மூழ்கடிக்கப்பட்டது. |
| | இரவில்.—தொழிற்சாலைகள் உள்ள பிரதேசங்கள்—வடமேற்கு ஜெர்மனி (Germany). | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi), ட்ரிபோலி (Tripoli). | ...... | ...... |
| | கோண்டார்.—(Gondar). | ...... | சேதமாயிற்று. |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | கவசமணிந்த மோட்டார் படைகள், விமானங்கள்.—போர்களம் முழுவதும். | ...... | 32 விமானங்கள். |
| | **பின்லாந்து (Finland).** | | |
| | முக்கியமான இடங்கள்.—பின்லாந்து (Finland). | 2 விமானங்கள். | பலத்த சேதம். |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **19–7–41.** (சனிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்** | | |
| | பகலில்.—விரோதி துணைக்காவல் கப்பல்கள் டச்சு (Dutch)க் கடற்கரை. | ... | 4 கப்பல்கள் சேதமாயின. |
| | கப்பல் துறைகள்.—டங்கர்க் (Dunkirk). | 5 விமானங்கள். | 4 விமானங்கள். |
| | துணைக்காவலுடன் கூடிய கப்பல்கள்.—நார்டர்னி (Norderney). | ...... | 2 கப்பல்கள் எரிந்து போயின, 2 கப்பல்கள் சேதமாயின. |
| | எண்ணெய்க் கப்பல்.–பிரெஞ்சு (French)க் கடற்கரை. | ...... | ...... |
| | இரவில்.—தொழிற்சாலைகள்--ஹானோவர் (Hanover), ரைன்லாந்தி(Rhineland)ல் மற்றும் சில இடங்கள். | ...... | பெருந்தீக்கள் கிளம்பின. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | ராணுவத் தலைமைக் காரியாலயங்கள், ராஜாங்க கட்டடங்கள், ரயில் வண்டிகள் நிறுத்துமிடங்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | தீயும் வெடிச் சத்தமும் கிளம்பின. |
| | மின்சார உற்பத்திசாலை, ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.–ட்ரிபோலி(Tripoli). | ...... 2 விமானங்கள் | மின்சார உற்பத்தி சாலை தகர்க்கப்பட்டது. |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | விமான நிலயம்.—கடானியா(Catania). | நஷ்டமில்லை. | ...... |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | கிழக்குப் போர்முனை. | | |
| | விரோதி சைனியங்கள், மோட்டார் படைகள், தரையிலிருக்கும் விமானங்கள்.—போரரங்கம் முழுவதும். | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **20—7—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.**

| | | |
|---|---|---|
| பகலில்.—படையெடுப்பு—வட பிரான்ஸ் (France), இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | ...... |
| விரோதி எண்ணெய்க் கப்பல், துணையாக கூடவரும் விமானம் சுடும் பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கும் கப்பல்—பிரான்ஸ் (France) கடற்கரை. | ...... | எண்ணெய்க் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. |
| இரவில்.—தொழிற்சாலைகள் நிறைந்திருக்குமிடங்கள்—ரைன்லாந்து (Rhineland)ம், அதில் முக்கியமாக கொலோன் (Cologne). | ...... | பல இடங்களில் தீப்பிடித்தது. |
| கப்பல் துறைகள்—ராட்டர்டாம் (Rotterdam). | ...... | ...... |
| படையெடுப்பு.—பிரான்ஸிலுள்ள விரோதி விமான நிலயங்கள். | ...... | சேதமாயிற்று |
| பாதுகாத்தல்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | ...... |
| தொழிற்சாலை கட்டடங்கள்.—ஆசென் (Aachen). | 1 விமானம் | ...... |

**இதாலி (Italy).**

| | | |
|---|---|---|
| துறைமுகம், ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—நேபிள்ஸ் (Naples). | ...... | தீயும், வெடிச் சத்தமும் கிளம்பின. |

**இதாலிய ஆபிரிக்கா (Africa).**

| | | |
|---|---|---|
| கப்பல் துறைகள்.—பெங்காஸி (Benghazi) | ...... | ...... |

**ருஷ்ய விமானங்களால்.**

**கிழக்குப் போர்முனை.**

| | | |
|---|---|---|
| விமானச்சண்டைகள்.—விரோதி விமான நிலயங்கள். | ...... | 25 விமானங்கள். |

**கருங்கடல் (Black Sea).**

| | | |
|---|---|---|
| விரோதி டார்பிடோ குண்டு வீசும் படகு.—கருங்கடல் (Black Sea). | ...... | மூழ்கடிக்கப்பட்டது. |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | விரோதி விமானப் படையெடுப்பு விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **15—7—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | விரோதி விமான நடமாட்டமேயில்லை. | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | ஸைப்ரஸ் (Cyprus) | ... | சேதமில்லை. |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | விமானச் சண்டைகள்—யுத்தகளம் முழுவதும். | 52 விமானங்கள். | 24 விமானங்கள். |
| **16—7—41.** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—இங்கிலாந்து (England)ன் தெற்குக் கடற்கரை. | 1 விமானம். | சேதமேயில்லை. |
| | இரவில்.—சில இடங்கள்—கிழக்கு, தென் கிழக்கு இங்கிலாந்து (England). | 1 விமானம். | சேதம் சொற்பம், காயம்பட்டவர்களும் சொற்பம். |
| **17—7—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—ஒரு பட்டணம்—வடகிழக்கு இங்கிலாந்து (England). | ... | சொற்பச்சேதம். |
| | சிற்சில இடங்கள்—இங்கிலாந்து (England). | ... | ... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | 2 விமானங்கள். | 2 விமானங்கள். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | ஸ்மலென்ஸ்க் (Smolensk). | ... | ... |
| **18—7—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—தென்கிழக்கு இங்கிலாந்து (England). | ... | 2 விமானங்கள். |
| | இரவில்—ஓரிடம்—கிழக்குப்பிரதேசத்தில் ஓரிடம். | ... | ... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | ஸைப்ரஸ் (Cyprus). | 1 விமானம். | சேதமேயில்லை. |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**19—7—41.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

| | | | |
|---|---|---|---|
| இரவில்.—இரண்டு இடங்கள்—மிட் லண்ட்ஸ் (Midlands). | | ...... | சேதமுமில்லை. ஒருவருக்கும் காயமுமில்லை. |

**எகிப்து (Egypt).**

| | | | |
|---|---|---|---|
| அலெக்ஸாண்டிரியா (Alexandria). | | ...... | ஒருவன் மாண்டான். 7 பேருக்குக் காயம். |

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

| | | | |
|---|---|---|---|
| பிரிடிஷ் கப்பல்கள்.—வட ஆபிரிக்கா (Africa) க் கடற்கரை. | | ...... | விரட்டியடிக்கப் பட்டன. |

**ருஷ்யா (Russia).**

| | | | |
|---|---|---|---|
| ஸோவியத் கடற்படையைச்சேர்ந்த சில கப்பல்கள்.—எஸ்தோனியன் (Estonian) தீவுகள். | | ...... | ...... |
| பட்டணங்கள்.—ஸோவியத் (Soviet), பின்னிஷ் (Finnish) எல்லை. | | ...... | ...... |

**20—7—41.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

விமான நடமாட்டமே இல்லை.

**ருஷ்யா (Russia).**

| | | | |
|---|---|---|---|
| லெனின்கிராட் (Leningrad) | ... | 11 விமானங்கள், | சொற்பச்சேதம். |

**பிரிடன் (Britain).**

பிரிடனி (Britain) ல் ஓரிடத்திலும் விமான நடவடிக்கையே இல்லை.

**ருஷ்யா (Russia).**

| | | | |
|---|---|---|---|
| லெனின்கிராட் (Leningrad) | ... | 8 விமானங்கள். | 4 விமானங்கள். |
| மாஸ்கோ (Moscow) | ... | 22 விமானங்கள். | சொற்பச்சேதம். சிலருக்குக்காயம். |

# யுத்தக் குறிப்புகள்.

## பலவான அபிப்பிராயங்கள்.

நம்முடைய வருஷமலரைப்பற்றி சில நண்பர்கள் நல்வார்த்தைகள் கூறியிருக்கிறார்கள். நமக்கு ஆசிமொழிகளும் கூறியிருக்கிறார்கள். எதற்காக ஆசிமொழிகள் என்றுதான் புரியவில்லை. எவ்வளவு காலம் நம்முடைய அறிக்கைகள் பிரசுரமாகும் என்று அவர்கள் நம்புகிறார்கள் என்பதைப்பற்றி ஒருமுகமான அபிப்பிராயத்தைக்காணோம். நாம் பிரசுரித்திருக்கும் வருஷ மலர் கடைசி மலராக இருக்கவேண்டும் என்று ஒரு நிருபர் நம்புகிறார். மற்றொருவர் நிச்சயமாக 1943-ஆம் ஆண்டில் பிரசுரிக்கவேண்டிய அவசியமிராது என்கிறார். மற்றொரு உத்தமர் அடுத்த வருஷம் ஜூலை மாதம் மத்தியம்வரை யுத்தம் நடவாதென்கிறார். நாம் என்ன நினைக்கிறோம். ஆகாயக் கோட்டைகட்டுவது நம்முடைய வழக்கமல்ல. பரிபூர்ணவெற்றி நம்முடையதாகும்வரை (இவ்வுலகெங்கும் அடிக்கும் இப்பெரும்புயல் அடங்கும் சமயம் வெற்றியாருக்குக்கிடைத்தால் என்ன அதன் பயன்தான் என்ன) ஹிட்லரும், நாஸியமும், அதன் லக்ஷியங்களும், மனோரதங்களும் உலகத்திலிருந்து ஒழிக்கப்படும்வரை யுத்தம் நடந்தே தீரும். மத்தியில் முடிவடையாது. இத்தொல்லையானவேலை நிறைவேற சிறிதுகாலம் பிடிக்கும். அவ்வளவேகாலம்தான் எங்கள் வாராந்திரப் பத்திரிகையும் யுத்த வழியைக் காட்டி பிரசுரிக்கப்படும். ஆகையால் இப்பொழுது உங்களுக்குத் தெளிவாகத் தெரிந்து விட்டதல்லவா?

## புதிய ஸிரியா.

ஸிரியாவில் காரியங்கள் திருப்திகரமாகவே நடந்தேறின. நேசதேசத் துருப்புகள் அலப்போ நகரத்திற்குள் பிரவேசிக்கப்போவதாக இன்று காலைப் பத்திரிகைகள் விளம்பரப்படுத்தின. பெய்ரூட்டில் துருப்புகள் வரவேற்கப் பட்டதுபோல் அலெப்போவிலும் வரவேற்கப்படுவார்கள் என்று எண்ணுகிறோம். டமாஸ்கஸ், பெய்ரூட், அலெப்போ முதலிய இடங்களையும் பாலஸ்தீனத்திற்கும் துருக்கிக்கும் மத்தியிலுள்ள முக்கியமான விமான தளங்களையும் நாம் பிடித்துக் கொண்டதால் நமக்குள்ள நன்மைகளோடு, ஸிரியர்களுக்கு நம்மால் காரியமாக வேண்டியிருக்கிறது. விஷி ஸர்க்காருக்குச் சாதகமாக ஸிரியர்கள் இல்லை. ஹூணனைக்கண்டால் அவர்கள் பயப்படுவதுடன் அவனைப் பகைக்கிறார்கள். தங்கள் தேசம் ஒரு பொது அமர்களமாக ஆவதில் அவர்களுக்கு இஷ்டமில்லை. அதனால் தங்கள் பட்டணங்களிலுள்ள ஜனங்களுக்கும் கிராமவாஸிகளுக்கும் ஏற்படும் கஷ்டங்களையும், அவர்களுடைய வர்த்தகம், அரசியல் முதலிய துறைகளுக்கு ஏற்படக்கூடிய காரிய தாழ்வுகளையும் அவர்கள் நன்கறிவார்கள்.

நேசதேசத்தார் ஸிரியாவை வியாபிக்க வெகுகாலதாமதம் செய்ததாக சிலர் குறைகூறுவதைக் கேட்டோம். ஒரே ஒருமாதம் தான் பிடித்தது. பிரெஞ்சுக் காரரும் அவர்களது குடியேற்ற நாட்டுத்துருப்புகளும் தங்கள் ராணுவ பிரமாணத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக வெகு ஊக்கத்துடனும் சாமர்த்தியத்துடனும் எதிர்க்க எண்ணினார்கள். போர்க்கள பூமி சந்நிவேசமும் வெகு

சிரமத்தைத் தரக்கூடியதாக யிருந்தது. அதிலும் நமக்காவது எதிரிகளுக்காவது அதிக உயிர்ச்சேதமின்றி முடிந்ததே சேனுபதிகளான வில்ஸன், கருத்து இவர்களுடைய அரசியல் தந்திரத்தையும் யுத்த நைபுண்யத்தையும் காட்டுகிறது.

இப்பொழுது நேசதேசத்தாருடையவோ, ஜெர்மானியருடையவோ, முற்றுகையிலிருந்து ஸ்வதந்திரம்பெற்று வர்த்தகத்தை விருத்திசெய்ய முற்படலாம்.

துருக்கியருடைய நீர் நில போக்குவரத்து சாதனங்கள் அபாயத்திலிருந்து விடுவிக்கப்பட்டதால் துருக்கியர் சந்தோஷமடைந்திருக்கிருர்கள். அச்சுதேசத்தாருடன் ஒப்பிடுமளவில் துருக்கியின் பலம் அதிகப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் வெளி கொத்தளம், போன்ற ஸூயஸ் கால்வாய் சாவதானப் படுத்தப்பட்டதால் இந்தியாவும் களித்திருக்கிறது.

மத்திய ஆசியாவிலுள்ள முஸ்லீம் தேசங்களில் போரைப் பரப்பி தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள அச்சரசுகளின் கொள்கையையும், முஸ்லீம் தேசங்களுக்கு சமாதானம், சாவதானம், ஸ்வதந்திரம் இவைகளை ஸ்தாபிக்க பிரிடன் கொண்டிருக்கும் உண்மையான அக்கரையையும் மத்திய ஆசியாவிலுள்ள தேசங்கள் இப்பொழுது ஒப்பிட்டுப்பார்க்கும்.

ஸிரியாவில் ஏற்பட்ட உயிர்ச்சேதம் 2,500-பேர்களில் பாதி ஸ்வதந்திர பிரெஞ்சுச் சேனையைச் சேர்ந்தவர்கள் என்ருல் சேனுபதி டிகாலின் இயக்கத்தின் முக்கியத்துவம் தெரியவரும்.

## மகத்தான நில யுத்தம்.

ருஷ்யாவை ஜெர்மனி படையெடுத்ததைப்பற்றி இவ்வறிக்கையின் மற்ருெரு பாகத்தில் காண்பீர்கள். ஆகையால் அதைப்பற்றிச் சுருக்கமாக இங்கு சொல்லப்படும். ஜெர்மானியர் முன்னேறுவதாகவும், ஸ்மலன்ஸ்கைப் பிடித்துவிட்டதாகவும் லெனின்கிராட் சீக்கிரம் விழுந்துவிடும் என்றும் அவர்கள் சொல்லிக்கொள்ளுகிருர்கள். ஆனுல் 10-நாட்களில் அல்லது மூன்று வாரங்களில் ருஷ்யாவைத் தோற்கடிப்பதாக ஜெர்மானியர் இப்பொழுது சொல்லிக்கொள்ளவில்லை. ருஷ்யரின் விமான பலத்தைப்பற்றி தங்களுக்கு உண்மையை உரைக்காமல் ஏமாற்றிவிட்டதாக ஜெர்மன் போர் வீரர்கள் குறைகூறுகிருர்கள். இந்த ஒரு மாதக் கடும்போரில் அவர்களுக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்று நாம் சொல்லமுடியாது. ஆனுல் அவர்களை எதிர்க்கும் ருஷ்யச் சேனையோ திருப்தியற்ற கூட்டமல்ல. தேச பக்தி நிறைந்தவர்கள். பயிற்சியற்ற, அனுபவமற்ற, அதிகாரிகளற்ற திருப்புகளல்ல. தற்காலத்திய யந்திர சாதனம் கொண்ட சேனை. எண்ணிக்கையில் ஜெர்மன் சேனைக்கு ஒப்பானது. யுத்தத்திற்காக சேகரித்து அப்புறப்படுத்தியிருக்கும் சேனையோ ஜெர்மன் சேனையைக் காட்டிலும் பெரிது. இம் "மின்னல் போர்" பல மாதங்கள் மிகுந்த நஷ்டத்துடன் நடக்கவேண்டியிருக்கும். மாரிகாலமும் வந்து இரவுகளும் குறுகினுல், போரின் "மின்னல்" மழுங்கிவிடும்.

## லிட்விஞவ்.

1939-ஆம் ஏப்ரல் மாதத்தில் வெளிநாட்டு காரியாலயத்திலிருந்து விலகி மௌனம் சாதித்த லிட்விஞவ் நாளது ஜூலை 8உயன்று ருஷ்யர்களுக்கு ஒலி பரப்பினார். அவர் அயல்நாட்டு மந்திரியாகயிருந்தகாலத்தில் ஜனநாயகங்களுடனும், சர்வதேச சங்கத்துடனும் ஒத்துழைக்கவேண்டுமென்று பாடுபட்டார். பிறகு அவர் திடீரென்று மறைந்தார். ருஷ்யாவில் நம்பிக்கை வைத்தவர்கள் கவலைப்பட்டார்கள். மேற்கிலிருந்து கிடைக்கும் நன்மைகளைக்காட்டிலும் அதிகமாக ஜெர்மனியிடமிருந்து அடையலாமென்று ஸ்டாலின் எண்ணி, ஜெர்மானிய—ருஷ்ய ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார். இப்பொழுது மறுபடி லிட்விஞவ் அரசியல் மேடைக்கு வந்து ஸ்டாலினைப்போலவே தேசபக்தி ததும்பும் சொற்களைப் பொழிவது வெகு ஸ்வாரஸ்யமானதே.

அச்சொற்பொழிவின் சிறிது நேரத்திற்கெல்லாம் திரு. சர்ச்சில் அவர்களும் ருஷ்யர்கள் இப்பொழுது நமது நண்பர்கள் என்று தெளிவாக உலகத்திற்கு வெளியிட்டார். இவ்வசனங்கள் ஜனநாயகங்களுக்குத் தைரியத்தை அளித்தது. மேலும், வெகு சீக்கிரம் தோற்றுப்போகப்போகும் ஒரு தேசத்துடன் சிநேகம் கொண்டிருப்பதாக திரு. சர்ச்சில் அவர்களைப்போன்ற புகழும், புத்தியும் வாய்ந்த ஒருவர் சொல்லுவதென்றால் சாதாரணமா? "எதிரியை நாம் ஒன்றுசேர்ந்து அடிக்கவேண்டும். ஒரேகாலத்தில் ஓயாமல் அடிக்கவேண்டும்" என்று லிட்விஞவ் சொன்ன வீரவார்த்தைகளின் த்வனியை ஒட்டியே நம் பிரதம மந்திரி பேசினார். ஜனநாயகத்தையும், சமதர்மத்தையும் பிரித்துவைக்க ஹிட்லர் செய்த பிரயத்தனம் பலிக்கவில்லை.

## ஜப்பானியரின் தர்ம சங்கடம்.

பிரிடன், அமெரிக்கா, ஜெர்மனி மூன்று தேசங்களும் ஜப்பானியரின் அரசியல் உணர்ச்சிகளை அறியமுடியவில்லை என்றால் நம்மால் முடியுமா? ராஜகுமார் கோனுயே ராஜீனுமா கொடுக்கிறார். புதிய மந்திரிசபை அமைக்கிறார். ராணுவ அசாமிகள் அதனால் ராணுவ கொள்கை பலப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். தேசத்தின் பொருளாதார நிலையையும், ராணுவப் பணச் செலவையும் கண்டிக்கும் முதலாளிகள் இனிமேலாவது நம் வார்த்தை ஏறும் என்று நம்புகிறார்கள். மத்ஸுவோகாவுக்கு ஜலதோஷம். அவரிடம் ராஜீனுமாபெற ஒருவர் அவர் வீட்டுக்குப் போகவேண்டியிருக்கிறது. இறுதியாக வந்த மந்திரி ஜாப்தாவில் அவருடைய பெயரைக்காணவில்லை. அவர் சிறிது காலத்துக்குமுன் ஸ்டாலினிக்கும், மாலடோவுக்கும் தன் கையெழுத்திட்ட படத்தை அனுப்பியதுபோல் இப்பொழுது ஹிட்லருக்கு அனுப்பினதாகப் பத்திரிகைகள் கூறவில்லை. எல்லாம் ஒரு குழப்பமாக யிருக்கிறது. நாம் கொஞ்சம் எல்லாச் சிக்கல்களை எடுத்துப் பிரிக்கப் பார்ப்போம். தூரக்கிழக்குப் பிரதேசத்தில் ருஷ்யாவுடன் சண்டை செய்ய வேண்டுமென்று ஜெர்மானியத் "தார்" குத்தித்தள்ளுகிறது. "கீழப் பிரதேசத்தில் புதிய திட்டம்" என்ற கொள்கை தெற்கே இழுக்கிறது. சைனுவிலுள்ள

நஷ்டத்தைக் குறித்து, ஜெர்மனியைப் பொருட்படுத்தாது தெற்கே சாம்ராஜ் ஜியத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற ஆசையிழுக்கிறது. இம்மாதிரியான பலவித மான ஆகர்ஷணங்களுக்கு மத்தியில் இந்த உலகத்திலே ஒரு புதிய சகாப்தத்தைத் துவக்கக்கூடிய ஒரு கொள்கை பகிரங்கப்படுத்தப்பட்டது. அது என்ன தெரியுமா? "ஜப்பான் ஜாக்கிரதையாகவும் தயாராகவும் இருக்கவேண்டும்" என்பதே.

ஜப்பானுக்கு புதிய திட்டத்தில்தான் அதிகப் பிரியம் என்று தெரிகிறது. ஜப்பானியர் ஏற்கனவே இண்டோ சீனத்தில் கால்வைத்துவிட்டார்கள். சைகோ னுக்கு அருகேயுள்ள கம்ரான் வளைகுடாவில் சில சலுகைகள் அபேக்ஷிக்கிறார் கள். தாய்லாந்திலிருக்கும் தங்கள் செல்வாக்கை உபயோகிக்க நினைப்பார்கள். அவர்களுடைய கடற்படை ராணுவத்தைப்போல் யுத்தத்தால் களைப்படையாமல் உத்ஸாகத்தோடு இருப்பதால் அதை உபயோகிக்க எண்ணுவார்கள்; இவைகள் எல்லாம் செய்தாலும், அமெரிக்காவோடு போராட்டம் இன்னும் ஏற்படாமல் இருக்கும்.

வடக்கே பிரவேசிக்கலாமென்றால், ஜெர்மானியருக்குத் திருப்தியை அளித்த போதிலும், சீனாவில் சைனியத்தை அதிகரிக்கவேண்டும். அதோடு ஒரு பெரிய புதிய எதிரியைத் தலையில் வரவழைத்துக்கொண்டதாகும். இது ஒரு பெரிய அபாயகரமான பொறுப்புதான். ஏனெனில் நிச்சயம் அமெரிக்காவோடு சண்டை ஏற்படும். ஏனெனில் இப்பொழுது வெடிமருந்து சாமான்கள் நிறைந்த அமெரிக் கக் கப்பல்களை ருஷ்யாவுக்குக் கொண்டுபோக வ்ளாடிவாஸ்டாக் என்ற துறை முகத்தை அமெரிக்கர் பகிரங்கமாக உபயோகிக்கிறார்கள். அவைகளை நிறுத்தும் படி ஜெர்மானியர் ஜப்பானியரைக் கேட்பார்கள். அப்படி ஜயமடைந்தாலும் குளிர்மிகுந்த பொட்டல் பிரதேசங்கள்தான் கிடைக்கும். ஜப்பானியருக்குக் குளி ரென்றால் பயம். மஞ்சுகுவோவைப் பிடித்து அதில் 3 கோடி சீனரைக் குடி யேற்றினதுபோல் தானாகும்.

## பிற்பட்ட செய்திகள்.

இன்று கிடைத்த செய்தியிலிருந்து ஜப்பான் புதிய மந்திரி சபையும் "காத் துப்பார்ப்போம்" என்ற ரகமாகத்தானிருக்கிறது. மத்ஸுவோகா இல்லாதது ஒன்றுதான் பேதம். "காப்ப"தென்றால் ருஷ்ய-ஜெர்மனி யுத்தம் தெளிவாகும் வரையில் என்றும், "பார்ப்ப"தென்றால் இண்டோ-சைனா, தாய்லாந்து இவைகளைப் பார்ப்பதென்றும், ஆனால், சிங்கப்பூர், டச்சுக் கிழக்குத்தீவுகள் இவைகளின்பேரில் ஒரு கவனமான கண்ணோட்டத்தோடு பார்ப்பதென்றும் தோன்றுகிறது. ஒருக் கால் ஜெர்மானியர் வெற்றிபெற்றால், நம் கிழக்கு அலங்கமான சிங்கப்பூரை ஜப்பா னியர் தாக்கத் துணிவார்கள். ருஷ்யர்கள் ஜெர்மானியர்களுக்கு வெற்றியில்லாம லடித்துவிட்டால், பிரிடனுடனும் அமெரிக்காவுடனும் பகைத்துக்கொள்ளாமல் ஜாக்கிரதையாகவிருக்கும்.

## ஐஸ்லாந்து விளைவுகள்.

யுத்த தந்திரப்படி கவனித்தால் அமெரிக்க ஐக்கிய ஸமஸ்தானங்கள் ஒரு தீவு என்றே சொல்லலாம். பிரிடனைப்போல் அதன் சாவதானம் கடல் பலத்தை ஒட்டியதாகி விட்டது. ஜெர்மானியர் ஜயிக்கவேண்டுமென்றால் அட்லாண்டிக் சமுத்திரத்தை ஜெர்மானிய ஏரியாகச்செய்தாகவேண்டும். ஆனால் அமெரிக்க சேனைகள் இப்பொழுது ஐஸ்லாந்தில் அதாவது ஸ்காட்லாந்திலிருந்து 600 மைல் களுக்கருகேயிருக்கின்றன. ஆகையால் அமெரிக்காக் கடல் ஸ்வாதந்திரியத்தை நிலைநிறுத்தவேண்டும். ஹிட்லரே வர்த்தகக்கப்பல்களை மூழ்கடிக்கும் பாத்தியத்தை நிலைநிறுத்த பிரயத்தனப்படுகிறான். ஒன்று ஹிட்லர் அமெரிக்க சங்கல்பத்தை ஏற்றுக்கொண்டு அட்லாண்டிக் யுத்தத்தை இழக்கவேண்டும், அல்லது அமெரிக்கா ஐஸ்லாந்தைக் காலிசெய்து, பிரிடனுடைய உயிர் நாடியை அறுக்கச் செய்து தானும் மரணபாயத்துக்குள்ளாகவேண்டும்.

இவை தான் உண்மையான நடப்புகள். ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தன் கடல் படைக்கு உத்தரவு செய்து அட்லாண்டிக் சமுத்திரத்திலுள்ள அச்சின் ஆக்கிரமணத்தை ஒழிக்கச் சொல்லவில்லை (கர்னல் நாக்ஸ்–ம் இன்னும் பலரும் அவ்வாறு அபேக்ஷித்தார்கள்). ஆனால் ஐஸ்லாந்தை வியாபித்துக் கொண்டதிலிருந்தே அம்மாதிரியான சந்தர்ப்பத்துக்கருகே வந்துவிட்டார் என்பது நிச்சயம்.

## இன்னும் தெற்கே.

ஜெர்மானியர் நார்வேயில் செய்திருக்கும் யுத்த பிரயத்தனங்களைத் தடுக்க அமெரிக்கர் முந்திக்கொண்டபடியால் தென் அட்லாண்டிக்கில் ஜெர்மானியர் கவனம் செலுத்தி மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள டாகார், கஸாபிளாங்கா என்ற துறைமுகங்களைப் பிடித்துக்கொண்டு அமெரிக்காவின் பக்கம்—ஒருக்கால் பிரேஸில் மீது இருக்கலாம்—பாய்வதற்குத் தயார் செய்கிறார்கள். நம்மைப் போல் அமெரிக்காவும் இமைக் கொட்டாது கவனிக்கிறது. மேலும், மேற்கு ஆப்பிரிக்காவில் ஸெனிகாலுக்குத் தெற்கேயுள்ள காம்பியாவில் ஒரு துறைமுகத்தை நாம் அமெரிக்காவிற்கு மேற்கு இந்தியத் தீவில் குத்தகை விட்டது போல் குத்தகையாக விடலாமென்ற ஒரு ஸ்வாரஸ்யமான அபிப்பிராயம் பிரிடிஷ் பத்திரிகைகள் கூறுகின்றன. அப்பொழுது விஷி டாகாரை ஜெர்மனிக்கு விட்டுக் கொடுக்க துரோக சிந்தை கொண்டாலும், அதன் கொடுக்கை வாங்கிவிடலாமென்று உத்தேசம் கூறப்படுகிறது. இது ஒரு நல்ல யோசனை தான். ஆனால் இதுவரை அமெரிக்கா பிரெஞ்சு வட ஆப்பிரிக்காவுக்கு சரக்குகள் தன்னுடைய மேல் பார்வையின் பேரில் அனுப்புகிறது. அவ்வாறு அனுப்பினால் விஷி ஸர்க்கார் அச்சரசுகளுடன் சேர சேனாபதி வேகாண்ட் உடன்படாமலிருக்கலாமென்று அமெரிக்கா நினைக்கிறது. டாகாரைத் தாக்குவதற்கான சமீபத்தில் அமெரிக்காவிற்கு ஒரு படைத்தளம் கொடுப்பதே வெகு மேலானதென்று தோன்றுகிறது.

# இரு முனைகளில் ஆகாயப் போர்.

# ருஷ்யா-ஜெர்மனி ஆகாய பலம்.

# நாஸி யுத்த முறைகளுக்குப் போட்டியாக ஸோவியத் திட்டங்கள்.

# இலக்குகளின் தூரத்திய விரிவால் விளைவுகள்.

(பி. பி. ஸியில் ஆலிவர் ஸ்வேர்ட்டின் ஒலிபரப்பு).

யுத்த முனைகளிலிருந்து சமாசாரம் கிடைப்பது அரிது. அதிலும் பின்லண்டு முதல் கருங்கடல் வரை பிரமாண்டமான நீளத்துக்கு விரிந்து கிடக்கும் ஜெர்மனி ருஷ்யாவை தாக்கும் யுத்த முனையைப் போல குறைந்த தகவல் கிடைக்கும் போரரங்கம் இருக்க முடியாது. பரந்த தூரங்கள்; போக்கு வரத்து சாதனங்கள் கிடையாது; ஆனதால் நிகழ்ச்சிகளுக்கு வெகு காலம் கிரமித்து அல்லாமல் சமாசாரம் எட்டுகிறதில்லை.

எதிரிகளின் இரண்டு விமானப் படைகளுக்கு முன் நிற்கும் அடிப்படையான பிரச்னைகள் என்ன? இவற்றை நாம் அறிந்தால் தற்பொழுது நடக்கும் யுத்தம் நமக்கு தெளிவாகும்.

இரு புறத்திலும் இரு பிரமாண்ட விமானப் படைகள். சங்கியையில் ஒன்றுக்கு ஒன்று இளைத்ததல்ல. ருஷ்யப் படை, கட்டுவதில் எவ்வளவு குறைகள் இருந்த போதிலும், கற்பனு சக்தி மிகுந்தது. வாஸ்தவத்தில், யுத்தத்தில் ஆகாயப் படையை உபயோகிப்பதைப் பற்றி, ருஷ்யா மிக்க தீர்க்க தரிசியாக இருந்திருக்கிறது.

ஜெர்மனி கையாளும் முறைகள் ருஷ்ய கற்பனையின் விளைவு—யுத்த நடவடிக்கைகளில் ஆகாய மூலம் மனிதர்கள் சாமான்களை தூக்கிச் செல்வது என்ற எண்ணமே ருஷ்யாவின் உற்பத்தி. பாரசூட் மூலம் துருப்புகளை இறக்குவது டாங்குகளை இறக்குவது, இவைகளைக் கண்டு பிடித்தது ருஷ்யா.

பாக்கி தேசங்கள் பெரும் விமானங்களைக்கட்ட அஞ்சின; ருஷ்யாவில் இந்த அச்சம் இல்லை. மற்ற எத்தேச விமான நிர்மாணத்தைக் காட்டிலும் ருஷ்ய நிர்மாணத்தில் கற்பனை தலை தூக்கி நிற்கிறது. முதன் முதலில் இவைகள் அசம்பாவிதம் என்று ஏளனம் செய்யப்பட்டன. இப்பொழுது அவைகளில் அநேகம் அனுஷ்டான சாத்தியமாகி விட்டன.

வெளியில் நின்று பார்ப்பவனுக்கு இரு படைகளின் தோற்றம் இது:— ருஷ்ய திரப்பில் ஒரு கற்பனை மிக்க படை, ஜெர்மன் திரப்பில் நன்றாக விருத்தி அடைந்த ஒரு படை; ஒரு புறம் மனவிரிவு, மற்றொருபுறம் தொழில் விருத்தி. கிட்டத்தட்ட நிலைமையை இவ்வாறு வகுத்துக் கூறலாம். இது கூறி இந்தப் புதிய போர் முனையில் சாதக பாதகம் செய்யக் கூடிய சில விசேஷ அம்சங்களைக் குறித்துக் கூறுவோம்.

### விசேஷ அம்சங்கள்.

இதுவரை ஜெர்மனி தாக்கிய பிரதேசங்களின் அளவு சிறிது, ஜன நெருக்கமும் ஜாஸ்தி. ருஷ்யாவிலோ நகரங்களும் வாசஸ்தலங்களும் சிதறி இருக்கின்றன, தூரங்களும் ஜாஸ்தி.

இரு திரப்புக்கும் போக்குவரத்து களின் நீளம் ஜாஸ்தி. தற் போதைய விமானப் படையை இது மிகவும் பாதிக்கிறது. ஒவ்வொரு விமானப் படைக்கும் அநேக தனி ஸாதனங்களும் நுண்ணிய யந்திர சௌகர்யங்களும் தேவை. அவற்றில் சிலதை ஆகாய மூலமாகவே கொண்டு போகலாம்; சிலதை தரை மீது தான் கொண்டு போக வேண்டும்.

பலத்த ஆகாயத்தாக்குதல் செய்ய வேண்டுமெனில் முன்னணிக் கொத்தளங்களுக்கு இடைவிடாமல் ஸப்ளைகள் போய்க் கொண்டிருக்க வேண்டும். எதிரிகளின் தாக்குதலுக்கிடையேயும் இம்மாதிரி ஸப்ளைகளைக்கொண்டு வருவதில் ஜெர்மானியர் வல்லவர் என்பதை காட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆயினும் மற்ற இடங்களைக் காட்டிலும் ருஷ்யாவில் ஜெர்மானியருக்குக் கஷ்டம் அதிகரிக்கும். ஜெர்மானியரின் போக்குவரத்து சாதனங்களை இடையூறு செய்ய ருஷ்யர்கள் எந்த அளவு சாதிக்கிறார்களோ அந்த அளவு அவர்களுக்கு வெற்றி.

ருஷ்யாவில் போக்குவரத்து சாதனங்கள் மற்றொரு திண்டாட்டம். நவீன சைனியங்களின் தளவாடங்களை தாங்கக்கூடிய ரோடுகளோ ரயில்களோ அதில் அதிகமில்லை. பாம்களை வீசுவதில் இலக்குகள் ஒரே இடத்தில் இருக்க இருக்க அவை பிரயோஜனமுள்ளவை. பாமிங் விமானத்துக்கு ஒரு முக்கிய இலட்சியமும், இரண்டாவது இலட்சியமும், சிலதடவை மூன்றாவது இலட்சியமும் கூட உண்டு. விமானி முக்கிய குறியை நோக்கித்தான் செல்ல வேண்டும். ஆனால், ஆகாய நிலைமை, அல்லது எதிரிகளின் குறுக்கீடு, அல்லது மெஷின் தொந்தரவு ஏற்பட்டால் அவன் இரண்டாவது இலக்கை குறித்துச் சென்று அதன் மீது பாம்கள் வீசலாம்.

இலக்குகளைத் திட்டம் செய்வதில் விமானம் செல்லும் மார்க்கம் முக்கியமானது. ஜெர்மன் பாமர் இங்கிலாந்துக்கு வருவதாக வைத்துக் கொள்வோம். அதன் இரண்டாவது இலட்சியம் முதல் இலட்சியத்தைப் போல் அவ்வளவு முக்கியமாகவே இருக்கும். நமது நகர்களும் தொழிற் பிரதேசங்களும் நெருங்கி நிற்கின்றன. ஆனதால் இலக்கு இல்லாத ஒரு பிரதேசமுமில்லை என்றே சொல்லலாம்.

ருஷ்யாவிலோ தக்க இலக்குகளாகக்கூடியவைகள் சிலவைதான், இடையே தூரம் ஜாஸ்தி. பூரா பாம் பாரங்களைச் சுமந்துசெல்லும் சாதாரண ஜெர்மன் பாமிங் விமானங்களுக்கு எட்டாக்கையில் பெரும் ருஷ்ய தொழிற் சாலைப் பிரதேசங்கள் இருக்கின்றன. பாமிங்கிலும் ஜெர்மானியர்கள் மிக்க செட்டாகஇருக்கவேண்டும். அதிக எண்ணெய்ச் செலவு பிடிக்காத இலக்குகளையே அவர்கள் குறியிடுகிறார்கள்.

இந்த யுத்தத்தில் தெரியக்கூடிய விஷயங்களில் இது ஒன்று:—விரிந்த தூரம், சிதறிய இலக்குகள் இவைகள் எம்மட்டு ஆகாயத் தாக்குதல்களில் பலத்தை குறைத்து வீணாக்குகின்றன என்பது.

ஆகாயத் தாக்குதல் செலவுபிடிக்கும். பெருந்தாக்குதலை திட்டம் செய்வது ஒரு பெருங்காரியம். அதற்கு வேண்டிய சாமான்சட்டுகளை சேகரிப்பது எளிதல்ல. தற்போது வீசப்படும் பெரும் பாம்களை ஏத்தவும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குக்

கொண்டுபோகவும் பிரத்தியேகமெஷின்கள் வேண்டும்.

சத்துரு தன்மீது மிக்க முயற்சிகளைச் செய்யும்படிக்கும் அதனுல் தான் பாதிக்கப்படாமலும் ஒரு தேசம் இருக்குமாஞல் அதன்மீது ஆகாயத்தாக்குதல் அம்மட்டில் வீணுகும், பலமும் குன்றும். உலகப்பரப்பில் ருஷ்யாவுக்கு 6-ல் 1 பங்கு. அதன் ஜனத்தொகை பெரிது. ஆயினும் அதன் யுத்த நாடிகள் எனக்கூடிய தொழிற்சாலைகள் சிதறி நிற்கின்றன. ஆகாயத்தாக்குதலுக்கு அது நல்ல களமல்ல.

கிழக்கே நடக்கும் ஆகாய யுத்தத்தைப்பற்றி நமக்கு இன்னும் சரிவர விவரம் கிடைக்கவில்லை. அது கிடைப்பதிலும் கஷ்டமுண்டு. ருஷ்யா விவரங் கொடுக்கத் தயாராயில்லை என்பதல்ல, அவ்வளவு எட்டாக் கைகளிலிருந்தும் அதற்கே தகவல்கள் சரிவர கிடைக்க வேண்டும். நாளடைவில் ஆகாய யுத்தத்தின் போக்குவிளங்கும்.

விளங்குகிறது ஒன்று மட்டில்—மேற்கே தங்கள் ஆகாயபலம் குறையும் அளவுக்கு கிழக்கு முனைக்கு ஜெர்மானியர் அவ்வளவு பலத்த ஆகாயப்படையைதிரட்டி அனுப்பி இருக்கின்றனர். இந்த நல்ல அவகாசத்தை ஆர். ஏ. எப். ஜெர்மனியையும், ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளையும் தாக்க பயன் படுத்திக்கொண்டிருக்கிறது. மேற்கிலிருந்து இந்தத் தாக்குதல் ருஷ்ய முனையில் ஜெர்மன் தாக்குதலின் பலத்தை சற்று குறைக்கலாம்.

ஆர். ஏ. எப்.பின் தாக்குதல்கள் இப்பொழுது காலம் நீடித்து நடக்கின்றன. 24-மணியில் அவைகள் பெருங் காலம் நடக்கின்றன. இம்முனையில் முன்பு நாம் பகலில் நீடித்து ஆகாயத் தாக்குதல் செய்யமுயற்சிக்கவே இல்லை.

இதன் காரணம் பகல் தாக்குதல்களில் சேதம் ஜாஸ்தியாயிருக்கும் என்பதால். இதை ஜெர்மானியர்கள் சென்ற வருஷம் கண்டுகொண்டார்கள். யுத்த ஆரம்பத்தில் நாம் செய்த முயற்சிகளிலிருந்தும் நாம் இதைத் தெரிந்து கொண்டோம். பகலில் பாமிங் விமானம் குறுக்கிட்டு சண்டை செய்யும் வேட்டை விமானத்திலிருந்து காத்துக் கொள்ளமுடியவில்லை என்பதைக் கண்டோம்.

ஆனதால் ஆக்கிரமண பிரான்ஸில் நமக்கு எதிரிடையாக ஜெர்மானியர்களிடம் ஏராளமான வேட்டை விமானங்கள் இருந்தபொழுது, நமது தேசத்தைக் காப்பாற்றவே நம்மிடம் வேட்டை விமானங்கள் போதும் போதாததாக இருந்தபோது, பகலில் நாம் தாக்க ஆரம்பிப்பது முட்டாள்தனம். நமது பாமர் விமானங்களுக்குமிக்க சேதம் ஏற்பட்டிருக்கும்.

ஆனுல் ருஷ்யப் படையெடுப்புக்கு முன்பே ஜெர்மன் ஆகாயப்படை கிழக்கே சென்றுவிட்டது என்று நமக்குத் தெரிந்தவுடன், இரவுத் தாக்குதல்களுடன் நில்லாமல் பகல் தாக்குதல்களையும் துவக்கினேம். பகல் பாமர்களைத்தனியாக அனுப்பவில்லை. அவைகளும் பலத்த வேட்டை விமானங்களும் செல்கின்றன. எதிரி வேட்டை விமானங்களை முன் நின்று துடைக்கின்றன.

நல்ல பயன் இதனுல் கிடைத்திருக்கிறது. எதிரிக்கு மிக்கசேதம். இந்த தாக்குதல்களின் எல்லை வேட்டை விமானங்கள் பறக்கும் அளவு. அது பகல் பாமரின் வரம்பைக் காட்டிலும் குறுகியது.

ஆக்கிரமண பிரான்ஸில் ஜெர்மன் கை குன்றும் வரை ஆர். ஏ. எப். ஆகாயத்தில் வெற்றிபெற முடியுமானால், ஜாஸ்தி தூரத்திலிருக்கும் இலக்குகளைத் தாக்க பகல் பாமர்களை நாம் அனுப்புவது சாத்தியம்.

அப்பொழுது 24-மணி நேரமும் ஜெர்மன் இலக்குகளைத் தாக்கும் காலம் வரும். அதுதான் நமது இறுதியான இலட்சியம். நமக்கு மிக்க சேதமின்றி ஜெர்மன் பிரதேசங்களில் சென்று பலமாகத் தாக்குவதின் மூலம் ஜெர்மன் ஆகாயப்பிரதேசங்களில் கை மேலோங்கி நிற்பது.

ஜெர்மன் இலக்குகளை பகலில் தாக்கியிருக்கிறோம். ஆயினும், அங்கு எங்கும் நமக்கு சந்தேகமற்ற முகான்மை சித்திக்கும் வரை அவைகளை நாம் இரவு அல்லது மேகமூட்டமன்னியில் தாக்குவது அசாத்தியம்.

இதுதான் தற்பொழுது கிழக்கிலும் மேற்கிலும் நடந்துவரும் ஆகாய யுத்தம். கிழக்கே ஜெர்மன் ஆகாயப்படைக்கு எதிரே ருஷ்யப்படை, மேற்கே ஆர். ஏ. எப். நமக்கு அதிர்ஷ்டவசமாக இவ்வாறு கிடைத்திருக்கும் அவகாசத்தை நாமும் ருஷ்யர்களும் கை நழுவ விடமாட்டோம். முதன் முதலில் ஜெர்மானியர்கள் தாக்குவதுபோல் தாக்கப்படுவதற்கும் உட்படவேண்டும்.

---

# ஒரு தீபிகை.

**ருஷ்யாவுடன் நாஸிகள் செய்த பேச்சுவார்த்தைகளின் வரலாறு,**

**யூக்ரேன் பிரதேசத்தை தங்கள் ஆதிக்கத்தில் விட்டு வைப்பதாயிருந்தால் அந்தப் பிரதேசத்தை யாதொரு தாக்குதலுமில்லாமல் பார்த்துக்கொள்வதாக வாக்குத் தத்தம்.**

**ருஷ்யர்கள் இந்தப்பேச்சுக்களை முறித்ததேன்.**

[ஜூன்மீ 29௳ ஆச்சியன் கோல்டிங் "டெயிலி டெலகிராப்" பேபருக்கு தந்திமூலம் அனுப்பிய செய்தி.]

லண்டன் போவதற்கு மாஸ்கோவைவிட்டு Sir ஸ்டாப்போர்ட் கிரிப்ஸ் (ராஜிய தூதர்) புறப்பட்டபொழுது, ஜெர்மன் ஆதிக்கத்தில் யூக்ரேன் பிரதேச எண்ணெய்க் கிணறுகளையும், தான்யக் களஞ்சியங்களையும் விடவேணுமென்றும் தங்கள் மேதாவிகளைக்கொண்டு கண்காணிப்பு செய்துகொள்ளுவதாயும், இதற்கு பதிலாய் அந்தப் பிரதேசங்களுக்கு யாதொரு ஆபத்துவராமல் தாங்கள் பார்த்துக் கொள்வதாயும் ருஷ்ய அந்நிய இலாகா மந்திரி மாலடோவுடன், கவுண்டு ஷூலம்பர்க் மூலம், ரிப்பன்டிராப் (ஜெர்மன் அன்னியதேசமந்திரி)—பேச்சு நடத்திக்கொண்டிருந்தான். சென்ற மார்ச்சுமீ முதல் இம்மாதிரி பேச்சுத் தொடங்கியது.

Sir ஸ்டாப்போர்ட் கிரிப்ஸ் மாலடோவிடம், தனக்கு ரகஸ்யமாய் சில தஸ்தாவேஜிகள் மூலம் ஜெர்மனி ஜூன்மீ 1௳ ருஷ்யாமேல் படையெடுக்க உத்தேசித்திருக்கிறதென்று தெரியவருவதாயும், பல்கேரியா தேசத்தில் ஜெர் மானியர் கையாண்ட முறையைப்போலவோ, அமைதியாகவே ஜெர்மானியர்கள் யூக்ரேனுக்குள் நுழைய எத்தனிப்பதாயும்—தகவல் கொடுத்தார்—இந்தத்தகவல் கிடைத்தவுடன் பேச்சுக்களை ருஷ்யா நிறுத்திக்கொண்டது.

இந்தக் காரணத்திற்காகத்தான், ருஷ்ய சேனாதிபதி மார்ஷல் டிமாஷங்கோ தன் மூலபலத்தை முழு உக்ரமாய் போர்நடத்தவேண்டி யூக்ரேனில் வைத்திருப்ப துடன், கடாசிவரை யுத்தம் நடத்தவேணுமென்றும், பின்வாங்கும்படி நேரிடும் போதெல்லாம், வைக்கோல்போர்களையும் தானியங்களையும், தொழிற்சாலைகளை யும், வயல் விளைவுகளையும் அழித்துவிடவேணுமென்று உத்தரவிட்டிருக்கிறார்.

இந்தக் காரணத்தின் நிமித்தமாய் பெஸரேபியாவிலும், பிரஸ்பிமிஸிலும் ருஷ்யர்கள் திரும்பி மின்ஸ்க் பகுதியிலுள்ள தயாரான அரண்களுக்கு வருமுன் வெகு தீவிரமாயும், ஜயபேரிகையுடன் ஜெர்மானியர் திருப்பி வெரட்டித் தாக்கினார்கள். இந்தத் தாக்குதலில் ருஷ்யர்களுக்கு வெகு நஷ்டம்தான்.

இதே காரணத்தினால்தான், ருமேனியாவிற்குச் சொந்தமான கருங்கடல் துறைமுகமான "கான்ஸ்டான்ஸா" என்ற நகரத்தை பயங்கரமான விதத்தில் தாக்குதல் செய்தார்கள். இந்தத் துறைமுகத்தில்தான் ருஷ்யாவின்பேரில் படையெடுப்புக்கு ஆயத்தமான கப்பற்படையையும், ஒடிஸாபேரில் ஆகாச மார்க்கமாய் குடை விமானங்களின் உதவியால் தாக்கவேண்டிய ஆகாயப்படை களையும் மேற்படி கப்பற்படைக்கு உபபலமாகவும் ஜெர்மானியர்கள் நிறுத்தி வைத்திருந்தார்கள்—"ஸ்டாக்ஹோம்"க்கு வந்த தகவல்களிலிருந்து, இம்மாதிரி யான தாக்குதல் ஜெர்மானியர்களால் எத்தனிக்கப்பட்டு வீணாகிவிட்டது என்று தெரிகிறது.

எந்தத் தெற்கு அரங்கத்தில் ருஷ்யர்கள் தங்கள் 15 காலாட்படைப் பகுதி களையும் எட்டுக் கத்திரிக்கோல் சேனைப்பகுதிகளையும் 2,000 கவசம்வாய்ந்த மோட்டார்களையும், 12,500 ஆகாசவிமானங்களையும் கொண்டு உக்ரமாய்த் தாக்கி வருகிறார்களோ, அந்த யுத்த அரங்கத்தை சப்பைகட்டுவதற்காக, தங்களுடைய ஸர்வியா தேசத்திலுள்ள ஆக்கிரமிப்புத் துருப்புகளை வாபஸ் வாங்கிக்கொண்டு அதற்குப்பதிலாக ஹங்கேரித் துருப்புகளை அங்கே மாற்றியிருக்கிறார்கள். அதாவது ஹங்கேரித் துருப்புகள், தெற்கு யுத்த அரணில் முனைந்து போர்புரிய லாயக்கில்லை என்ற காரணம்தான்.

மேற்படி சம்பந்தமாய் ஒரு உடன்படிக்கை இன்றுதான் ஜெர்மானி ஹங்கேரி கவர்ன்மெண்டாருடன் செய்துகொண்டது.

நாஸிகளுக்கு, பொஹிமியா ப்ரொடக்டரேட் ஜனங்களிடமிருந்து மேலும் உபத்திரவங்களும் கஷ்டங்களும் உண்டாகியிருக்கின்றன. அதனால் அவர்கள் அந்த நாட்டில் வைத்திருக்கும் காலாட்படைகளை பலப்படுத்தும்படிக்கு ஏற்பட்டிருக்கிறது. தவிரவும் கட்டுப்பாடுகளையும் மேலும் இருக்கியிருக்கிறார்கள். தவிரவும் இரா நடமாட்டம் கூடாது என்றும் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

நாஸிகளுக்கு எதிரிடையாக அகில ஸ்லாவிய இயக்கம் பலமாகிக்கொண்டு வருவதை கட்டுக்கு அடங்காத குதூஹலத்துடன் பிராக் என்ற பொஹிமிய தலைநகரத்தில் வரவேற்கிறார்கள் என்று ஒரு பிரயாணி தகவல் கொடுக்கிறார்.

எஸ்தோனியாவிலும், டாகோ ஓசல்—தீவுகளிலும், பால்டிஸ்கி—டால்லின் கரைகளிலும், உள்ள ருஷ்ய விமான நிலயங்களின் பேரிலும், கப்பல் தளங்களின் பேரிலும், ஜெர்மானியர்கள் விமானப் படையெடுப்பும், கப்பல் படையெடுப்பும் செய்கிறார்கள்.

இப்படிப் படையெடுப்பதற்கு ஒரு காரணம் யாதெனில், பால்டிக் ஸமஸ்தானங்கள் எதிர்பாராதபடி தங்களை வெகு உக்ரமாய் எதிர்ப்பதுதான்—தவிரவும் ஜெர்மானியர்களுக்கு ஏற்பட்ட அபார நஷ்டங்களுக்கு ஈடுசெய்ய, பின்பாகத்திலிருந்து தாக்கவேண்டியது அவசியமாகிவிட்டது.

மற்றொரு காரணமும் இதற்கு உண்டு. பின்லண்டு தேசத்தில் ஜெர்மானியர் ஏராளமாய் திரட்டி நிறுத்திவைத்திருக்கும் துருப்புகளின் பேரிலும், ஹெல்ஸிங்கை—ஏபோ நகரங்களின் பேரிலும், ருஷ்யர்கள், தற்போது செய்யும் தாக்குதல்களை நிவர்த்திக்கவே, இந்த யுத்த தளங்களை ஜெர்மானியர்கள் கைப்பற்ற உத்தேசிக்கிறார்கள்.

ருஷ்ய பளுக்கப்பற்படைகளை ஜெர்மானியர் கடற்படை, எஸ்தோனியக் கடல்களுக்கு தங்கள் E படகுகளையும் மீன்வெடிப் படகுகளையும் அனுப்பி வெகு பலமாகத் தாக்குகிறார்கள்.

மின்னல் போர் ஆயத்தங்களால், அந்த ஜீவாதாரமான கடல் தளங்களையும், விமான நிலயங்களையும், பிடிக்க ஹேதுவாய், கடல்மார்க்கமாயும் ஆகாய குடை விமானங்கள் மூலமாயும் ஜெர்மானியர்கள் துரிதமாய் துருப்புகளை அனுப்பி சேனையை அந்தக் கரைகளில் இறக்க தயார்செய்யும்படி அவைகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

பால்டிக் யுத்த நடவடிக்கையைப் பொருத்தது தான் ஜெர்மானியரின் பின்லண்டு துருப்புகளின் வேலை. காரிலியாவின் கோட்டைக் கொத்தளங்களும், அதிலுள்ள சேனை பலமும் சேர்ந்து, அந்த ஜெர்மன் துருப்புகளை சிதரடித்துவிட்டது. வடக்கு பின்னிஷ் யுத்த அரங்கத்தில் ருஷ்யாவுக்கு 12 டிவிஷன்களுள்ள செஞ்சேனையிருக்கின்றது. இதனுடைய பலத்தாலும் ஜெர்மன் துருப்புகள் சிதரடிக்கப்பட்டன.

லெனின்கிராடின் எதிர்பாராத எதிர்ப்புகளால் பால்டிக் ஸமஸ்தானங்களில் நாஸிகள் முன்னேறமுடியாமல் தடைபட்டால், இந்தப்படைகள், அந்த நகரத்தின் பேரில் திட்டம்போடப்பட்ட கத்திரிக்கோல் வ்யூகமாக எதிர்ப்பு நடத்தும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

பின் தேசத்தார்களைப் பற்றியோவெனில், விஷயம் நன்றாய் அறிந்த ருஷ்யர்கள் இதை பின் தொடுத்த யுத்தம் கேவலம் தற்காப்புக்கு யுத்தம் என்று நன்கு தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இது மட்டுமல்ல ருஷ்யர்களின் சேனையானது கொஞ்சம் பலவீனமாகி விட்டது என்ற குறிகள் தெரிந்தால், 4 லக்ஷம் பின்னர்கள் உடனே ருஷ்யா பேரில் பாயும் என்று ருஷ்யர்களுக்கு நிச்சயமாய்த் தெரியும்.

ஆதலால் இரு திரப்பார்களும், வரும் மாபெரு யுத்தத்திற்கு ஆயத்தமாகிறார்கள். வெகுசாய் கெரிலியாவிலும், லடோகா ஏரியின் வடகரைப் பிரதேசத்திலும் போரிடுவார்கள்.

நாஸிகள் தங்கள் ஆல்பைன் துருப்புகளைக்கொண்டு (கர்ச்சினியிலிருந்து வந்தவர்கள்)—மூர்மான்ஸை மின்னல்போல் தாக்கி—மூர்மார்ன்ஸ் லெனின்கிராட் ரயில்வேயைத் துண்டாட எத்தனப்பட்டார்கள். ஆனால் ருஷ்யர்கள், ஆர்டிக் அரங்கத்தில் நிலைமையை சமாளித்து விட்டார்கள்.

மூர்மார்ன்ஸ்கையும், ருஷ்ய ஆர்டிக்கரையயும் ரக்ஷிப்பதற்காக, தரைக்குக் கீழே அமைத்துவைக்கப்பட்ட போர் விமானங்களின் நிலயங்களைத் தாக்கி நொருக்கவேண்டிய நோக்கத்துடன் ஜெர்மானியர்கள் விமானங்களை அனுப்புகிறார்கள்.

இவர்கள் செய்யும் காரியங்களைப் பொருட்படுத்தாமல், ருஷ்ய தேசத்து ராணுவ தந்திரிகள் ஜெர்மானியர்களின் மின்னல் எதிர்ப்புப் போருக்கு எதிரிடையான வேலைகளை வெகு தீவிரமாய் திட்டமாயும் செய்து வந்து அந்தத் திட்டத்தை மேன்மேலும் அமுலுக்குக்கொண்டுவந்துவிட்டார்கள். யுத்தம் துடர்ந்த இரண்டாம் நாளன்றே, பின்லண்டு தேசத்திய துறைமுகமான வியார்க்கை ருஷ்யா—தன்வசமிருந்ததை—விலையுயர்ந்த சாமான்களற செய்யப்பட்டது.

தவிரவும், ருஷ்யர்கள் சைமா பள்ளத்தாக்கு, எலெக்டிரிக் பவர் உற்பத்தி நாசத்தையும், பழைய பின்லண்டில் தொழிற் உற்பத்திசாலைகளடங்கிய ஜில்லா முழுமையும் எரித்து பாழக்கி விட்டார்கள்.

---

## ஆலோசனையில் பிழையா?

## ருஷ்யாவில் பொருளாதரவு சகாயம் கிடைக்கும் என்று ஹிட்லர் நினைப்பதானால் எவ்வளவு தூரம் இந்த எண்ணம் கைகூடும்!

## இந்த 2 மாதமாக ஜெர்மன் முன்னேற்றத்துக்கு ஏற்பட்டிருக்கும் தடையினால் விளைவு என்ன?

(யார்க்ஷயர் போஸ்டின் லண்டன் நிருபர் எழுதுவது).

ஜெர்மன் எதிர்ப்புக்கு பொருளாதார அவசியமும், ராஜீய பேராசையும் எவ்வளவு மட்டில் காரணமாகும் என்பது பரிசீலனைக்கு உகந்தது. ருஷ்யா பேரில் படையெடுத்திருப்பது ஏதோ கொஞ்சமாகவாவது பொருளாதார சௌகர்யத்தை உத்தேசித்துத்தான் என்பது நிச்சயம். ருஷ்யாவின் வியாபார ஸ்திதியை அறிந்துள்ள நிபுணரின் வார்த்தைப்படி பார்த்தோமானால் ஜெர்மனியின் இவ்வெண்ணம் பலன் பெறவில்லை என்பது அறிவுறுத்தப்படுகிறது.

அவருடன் நான் பேசியதிலிருந்து, ருஷ்யாவுக்குள் அதிதுரிதமாக ஜெர்மனி நுழைந்தால் அல்லாமலும், எதிர்பார்க்கப்படுவதற்கு மாறாக, ருஷ்யா இவ்விதம் ஜெர்மன் முன்னேற்றத்தின்போது, தன் பிரதேசத்திலுள்ள விளைபொருள் எதிரிக்குக் கிடைக்காதபடி செய்யத் தவறினால் அல்லாமல், ஜெர்மனிக்கு இப் போரினால் எள்ளளவும் சௌகர்யம் கிடைக்கமாட்டாது.

ஒருக்கால் முன்னேற முடியாமல் ஜெர்மனி தடை செய்யப்பட்டால் இதனால் அதற்கு பெரிதும் தீங்கே நேரும். வளாடிவாஸ்டாக் மூலமும் டிரான்ஸ் ஸைபிரியன் ரயில் பாதை மூலமும் இதர தேசங்களிலிருந்து ஜெர்மனி அடைந்து வந்த அவசிய சாமான்களையும் இந்த யுத்தத்தினால் இழக்க நேரிடுகிறது.

இப்புதிய சந்தர்ப்பத்தில் பிரிடிஷ் கடல் முற்றுகையில் தூம்பாக கருதப் பட்ட வளாடிவாஸ்டாக் ஜெர்மன் முற்றுகைக்கு பெரியதுரப்பாக ஏற்பட்டிருக் கிறது.

ருஷ்யாவுக்குள் நெடுந்தூரம் ஜெர்மனி பிரவேசிக்குமானால் அதனால் ஏற்படும் லாப நஷ்டத்தைப்பற்றியும் அவர் சொல்லுவதாவது:— யூக்ரேன் பிராந்தியத்தில் பிரவேசிக்கவொட்டாமல் 6, 8 வாரங்கள் வரையிலாவது ஜெர்மனி தடைசெய்யப்பட்டால் இவ்வருஷத்திய விளைபொருள் பலன் ஜெர்மனிக்குக் கிட்டாமல் செய்யப்படும்.

காகஸியன் எண்ணெய்க் கிடங்கு சம்பந்தமாய், இப்பிராந்தியம் வரையில் ஜெர்மனி முன்னேறுமா என்பதையும், முன்னேறுங்கால் இப்பிராந்தியம் எந்த நிலைமையில் அவர்கள் வசம் சிக்கும் என்பதையும் பொறுத்ததாகும் கிடங்குகளிலிருந்து எண்ணெய் கிடைப்பது. பாழாக்கப்பட்ட எண்ணெய்க் கிணறுகளை உபயோகத்துக்குக் கொண்டுவர ஒரு வருஷகாலமாவது பிடிக்கும்.

ருஷ்யாவின் பொதுப்பண்ணைப் பயிற்சியும் அதற்கு அவசியமான பொதுப் பட்ட யந்திர சாதனங்களும் ஜெர்மனிக்கு அசௌகர்யத்தையே உண்டாக்கும். பாழாக்கப்பட்ட யந்திர வசதிகளுக்குப் பதிலாக உபயோகப்படக்கூடியதாய் குதிரைகளைக்கொண்டு வேலை செய்யக்கூடியதான ஏர் முதலிய விவசாயவசதிகள் கிடைக்காது. பொதுப்பண்ணையின் அனுபோகமுள்ள நிபுணர்களை ருஷ்யா அப்புறப்படுத்துமானால் அவர்களுக்கு பதிலாக குறைந்தது 2,50,000 கூலிகளை யாவது (?)வேலைகளுக்கு ஜெர்மனி தயாரிக்க நேரிடும். விவசாயம் தனிப்பட்ட குடியானவர்களின் வசமே இருந்திருக்குமானால் இவ்வளவு சங்கடம் இல்லை. பொதுப்பண்ணை காரணமாக ருஷ்யாவுடன் சமாதானமாக இருந்தபொழுது கிடைத்ததைவிட மிகக்குறைவாகவே இந்தப் பிராந்தியத்தை கைப்பற்றின பிறகு ஒருவருஷத்தில்கூட விளைபொருள் ஊதியம் கிடைக்கமாட்டாது.

யூரல் மலைத்தொடர் வரையில் ஜெர்மனி முன்னேறுமானால் ஏதோ கொஞ்சம் இரும்பு அதற்கு கிடைக்கக்கூடும். அங்கும் ருஷ்யா முன்எச்சரிக்கையுடன் நடப்பதானால் அப்புறப்படுத்தப்பட்ட யந்திர சாதனங்களை ஸ்தாபிக்க காலஞ் செல்லும். மேலும் இவைகளை மேன் பார்க்கத்தக்க ஆட்களை நியமிப்பதும் கஷ்டம்.

ட்ரான்ஸ் ஸைபீரியன் ரயில் பாதை மூலம் ஜெர்மனிக்கு சாமான்கள் கிடைக்கக்கூடாதபடி ஏற்பட்டிருக்கும் இந்த சந்தர்ப்பம் நமக்குத்தான் அதிக பயன் கொடுப்பதாக ஆகிறது. இப்பாதை மூலந்தான் பிரதி வருஷமும் ஜப்பானிலிருந்து ஜெர்மனிக்கு 4,00,000 டன் கொழுப்பு கிடைத்துக் கொண்டிருந்தது.

இதைவிட ரப்பரும் கிடைத்தது. வருங்காலத்தில் ஏராளமாக ரப்பரும் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மசகு எண்ணெயும் தெளிவு எண்ணெயும் இப்பாதை வழியேதான் கிடைத்தது. ஆனால் சென்ற ஒரு வருஷ காலமாகவே இப்பாதை வழியாக ஜெர்மனிக்குக் கிடைத்துவந்த பஞ்சு அமெரிக்காவின் முயற்சியினால் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்திருக்கிறது. சென்ற ஒரு வருஷத்தில் 20,000 டன்தான் ஜெர்மனிக்கு கிடைத்திருக்கிறது.

---

# கதம்பம்.

---

1. "நாஸி தத்துவத்தின் தெய்வ வெறுப்பையும், கொடுமையையும், நம்பிக்கையின்மையையும், அகௌரவத்தையும் அறிந்த எந்த இந்தியரும் எவ்வகையிலும் நாஸி தத்துவத்தையும் அதனுலாவதுகளையும் எதிர்க்கவேண்டுமென்றும் இந்தியாவைப் பாதுகாப்பதற்காக ஒன்று சேரவேண்டுமென்பதைப்பற்றியும் சந்தேகப்படவே மாட்டான்."

(இந்திய சேனாதிபதி, ஸர் ஆர்க்கிபால்ட் வேவல், ஸிம்லா, ஜுலை 17).

2. "ஹிட்லருடனும் அவன் பரிவாரங்களுடனும் நாம் ஒரு ஏற்பாடும் செய்து கொள்ளமாட்டோம். ஐரோப்பாவிலிருந்து நாஸி தத்துவம் என்ற வியாதியை நிவர்த்திக்கும் வரையில், ஆரோக்கியமும், சமாதானமும் உண்டாகாது."

(ஸர் ஆர்க்கிபால்ட் ஸின்க்ளேர்—ஜூலை 19).

3. "உங்களுடைய உதவியுடன், இதை வேர்ப்பிடுங்கலாய் அகற்றி, ஹிட்லருக்கு முடிவு ஏற்படும்படி செய்ய நாங்கள் தீர்மானம் செய்திருக்கிறோம்."

(அமெரிக்காவிலுள்ள பிரிடிஷ் அயல் நாட்டு மந்திரியான ஹாலிபாக்ஸ்பிரபு, ஸான் பிரான்ஸிஸ்கோ, ஜூலை 19).

4. "'வி' என்பது ஆக்கிரமிப்பு நாடுகளின் தோல்வியடையாத மனோதைரியத்தின் அடையாளம். நாஸிக் கொடுமைக்கு ஏற்படப்போகும் முடிவுக்கு ஒரு அறிகுறி."

(மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில், ஜூலை 20).

5. "அநேகம் சண்டைகள் செய்து தான் பிரிடன் மேன்மையடைந்திருக்கிறது. பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தில் ஒன்றுபட்ட நாடாக இந்தியா மாறியதும் அதிக சிரமத்தினாலேதான்."

(இந்தியாவைப்பற்றி ஒலிபரப்பியபொழுது ஸர் டெனிஸ் ப்ரே வெளியிட்டது).

6. "ஹிட்லர் மின்னல் எதிர்ப்புக்கு வசமாகி, அதனாலேயே கொல்லப்படும்பொழுது, இங்கிலாந்து எதை வேண்டுமானாலும் செய்யலாம்."

(நியூ யார்க் போஸ்டில் மிஸ்டர், ஸாமுயல் கிராப்டன், ஜூலை 21).

7. "அரசாங்க நிர்வாகத்தைப்பற்றி யோசிப்பதற்கு யுத்த காலம் உசிதமல்ல. ஆகிலும் யுத்த முயற்சிகள் தான் எல்லா வகுப்பாரையும் எல்லா நிலைமைகளையும் ஒன்று சேர்க்கக்கூடியது. இந்தியாவின் யுத்த முயற்சிகள் அபரிமிதமாயிருந்தபோதிலும் இந்தியாவிலுள்ள பிரமுகர்கள் இதை இன்னும் அதிகமாக விருத்தி செய்யக்கூடும்."

(பிரிடிஷ் ஒலிபரப்பில் ஸர் டெனிஸ் ப்ரே சொன்னது).

---

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

ஜூலை 7௳ முதல் 13௳ வரை.

### பொதுவாய் பேசுமிடத்து.

'பொதுப் பிரசாரம்' என்ற தலையங்கத்தின் கீழ் வால்ட் மிட்லர் நடப்புக் காரியங்களைப்பற்றி ஜூலை 8௳ ரேடியோவில் பேசிமுடிக்கையில், 'ஐயோ பாவம்!

பிரிடிஷ் மக்கள் ஏமார்ந்தவர்கள் ; அவர்களுக்குச் சரியான யோசனை சொல்லுவாரில்லை. பெர்லின் நகரத்தார்களைப் போலவே லண்டன் நகரத்தார்களும் கஷ்டப் பட்டிருப்பார்கள்,'' என்று அனுதாபம் காட்டியிருக்கிறார்கள்.

சரீர அமைப்பில் ஒரேவிதமான ரத்தத்தாலும் மாம்சத்தாலும் அமைக்கப் பட்டவர்களானாலும் தைரியத்தில் பெர்லின் வாசிகளைப்போல் லண்டன்வாசிகள் கோழைகளல்ல. லண்டன் நகரத்திலேயே 3,00,000 யூதர்கள் வசிக்கிறார்கள்.

## முஸோலினியின் 'சாம்ராஜ்ஜியம்'.

கிழக்கு ஆபிரிக்காவில் 2½-லக்ஷம் இதாலிய சைனியத்தைப் பறிகொடுத்து விட்டதைப்பற்றி ரோம் ரேடியோ ஜுலை 10-ல் ஒப்பாரிவைத்து அழுதது. முடிவில் அச்சு நாடுகளுக்கு வரப்போகும் வெற்றிக்காக இதாலி பலிகொடுத்ததற்கு இது ஒரு சாச்வதமான அத்தாக்ஷியென்று சொல்லிக்கொண்டது.

இதே ரேடியோவிலிருந்து மூன்று மாதங்களுக்குமுன் சீனியர் அன்ஸால்டோ "ஆபிரிக்காவை இதாலி ஆளப்போவது நிச்சயமென்று இதுவரையில் இவ்வளவு திடமாய் இதாலியர்கள் நினைத்ததில்லை" என்றார்.

இப்பொழுதோ இதாலிக்குச் சொந்த தேசமும் போய்விட்டது. 'டாஸ்ரைச்' என்ற ஜெர்மன் வாரபத்திரிகை இதாலியை ஜெர்மனி பிடித்த நாடுகளில் ஒன்றாகச் சேர்த்துவிட்டது. 5-லக்ஷம் சைனியத்தைப் பறிகொடுத்துவிட்டு, முடிவில் சாம்ராஜ்ஜியத்தையும் தோற்று, பாபராகி, ஜெர்மன் அமீனுக்கள் வாரண்டோடு திண்ணையில் பிடித்துக்கொள்ள உட்கார்ந்திருக்கிறார்கள். இதாலி சூதாடி எல்லாவற்றையும் தோற்றுவிட்டது.

## ஐஸ்லாண்டைப்பற்றி ஹா-ஹா சொல்லுவது.

'மன்ரோ சித்தாந்தத்தைக் கிழித்தெறிந்துவிட்டு, பூகோள மேற்கு பாகத்தைக்கடந்து வந்து, அமெரிக்கா ஜெர்மனியை சண்டைக்கிழுக்கிறது. ஆனால் ஜனங்கள் ரூஸ்வெல்டை ஜனநாயகப் பதவிக்குத் தேர்ந்தெடுத்தபோது இந்தப் பேச்சு கிடையாது. தேர்தல் சமயத்தில் ஒன்றைச் சொல்லிவிட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அதை மாற்றிவிடுவது தான் ஜனநாயக அரசியல் போலும்' என்று ஹா ஹா பிரபு ஜெர்மன் ரேடியோவில் ஜுலை 13-ல் சொன்னார்.

ஹிட்லரைத் தேர்ந்தெடுத்தபோது அவர் என்ன வாக்குத்தத்தம் செய்தார்? யுத்தம் துவக்கப் போவதாகச் சொன்னாரா? ஆனால் ஹிட்லர் வசிக்கும் நாட்டில் ஜனநாயகமேது.

## ருஷ்யாவுக்கு பிரிடிஷ் விமான உதவி.

பிரிடிஷ் சானல் கரையிலும், பாதுகாப்பில்லாத மன்ஸ்டர் போன்ற பழைய ஜெர்மன் பட்டணங்களிலும் பிரிடிஷ் விமான எதிர்ப்பினால் ருஷ்ய யுத்தம் மாறிவிடாதென்று ஜுலை 10-ல் பெர்லின் ரேடியோ ஒலிபரப்பியிருக்கிறது.

ஜெர்மன் அணிவகுப்புக்குப் பின்னுலுள்ள ஸ்தலங்களையும் பாதைகளையும் திட்டப்படி அழிப்பது தான் பிரிடிஷ் விமானப்படையின் வேலை. ஜெர்மானியர் சொல்லுகிறபடி மன்ஸ்டர் பாதுகாப்பில்லாத ஸ்தலமல்ல. அது ஒரு முக்கிய மான ரயில்வே ஸ்டேஷன், விமான நிலயம், சைனியம் தங்க விடுதியிருக்கிறது.

## வெற்றியைப்பற்றி வேவலின் அபிப்பிராயம்.

நியூ யார்க் டைம்ஸ் நிருபரோடு பேசிக்கொண்டிருக்கையில் சேனுபதி வேவல், பிரிடனுல் யுத்தத்தில் வெல்ல முடியாதென்று வெளிப்படையாய்ச் சொன்னதாக ஜெர்மனி ஜுலை 8-ல் ஒலிப்பரப்பியது. இதிலிருந்து எகிப்தின் அரசாங்கத்தாரும் இதைக்கவனிக்கத்தக்கதாயிருந்ததாகச் சொல்லப்பட்டது.

இதற்கு ஐந்து நாட்களுக்குமுன்தான் அல அஹ்ராம் என்ற பத்திரிகையில், 'ஆபத்துக்காலத்தில் தன் சைனியத்தை நம்பி, வெற்றி நிச்சயமென்று திட மனதுடன் வேவல் சண்டை செய்தார்' என்று எகிப்தின் பிரதமமந்திரி ஹுஸேன் ஸிர்ரி பாஷா எழுதியிருக்கிறுர்.

## கடற்சண்டை.

ஆஸ்திரிலேயாவில் மீதப்படும் கோதுமையையெல்லாம் வாங்கிக் கட்டிவிடப் போவதாக ஆஸ்திரேலிய வியாபாரமந்திரி சொன்னதை வைத்துக்கொண்டு ஜுலை 11-ல் ஜெர்மன் ரேடியோ அட்லாண்டிக் யுத்தத்தில் ஜெர்மனி வெற்றி யடைந்துவிட்டதற்கு இது ஒரு அத்தாக்ஷியாகச் சொல்லுகிறது.

இந்தக்கடல் மகாயுத்தத்தில் ஜெர்மனி சாதித்தது ஸ்வல்பம்தான். யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து வரும் சாமான்களில் 100-க்கு 4 பங்குதான் இங்கிலாந்துக்குவந்து சேரவில்லை.

தினசரி 2,000 பிரிடிஷ் கப்பல்கள் கடலில் சஞ்சரிக்கின்றன. இவைகளில் 300 கப்பல்கள் ஜெர்மனி தாக்குமிடங்களிலிருக்கும். ஆயினும் இந்த வருஷத்து பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல், மே, மாதங்களில் சராசரி வாரத்துக்கு 27 கப்பல்கள் தான் சேதம்.

---

# B.—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

---

## ஐக்கிய அமெரிக்க நாடுகள்-ஜெர்மனியின் துர் எண்ணங்கள்.

அமெரிக்கா ஐஸ்லாந் (Iceland)தை ஆக்கிரமித்துக்கொண்டதைப்பற்றி ஜுலை மாதம் 10-ம் தேதி இந்துஸ்தானியில் இதாலி ஒலிபரப்பியது. ஜெர்மனி

பூகோளத்தின் மேற்குப்பாதியை தன் ஆக்கிரமிப்பின் கீழ் கொண்டுவரப்பார்க்கிறதென்று ஒரு பொய்யான முகாந்திரத்தை வைத்துக்கொண்டு தலைவர் ரூஸ்வெல்ட் இம்மாதிரி செய்துவிட்டார் என்று இதாலிய ரேடியோ கூறிற்று. ஜூலை மாதம் 13-ம் தேதி கிரேட் பிரிட்டனு (Great Britain) க்கும், வட அமெரிக்காவிற்கும் (North America) ஆங்கிலத்தில் ஒலிபரப்புகையில் அச்சு நாடுகள் அமெரிக்காவை ஒரு நாளும் தாக்கவே தாக்காது என்று இதாலிய ரேடியோ கூறிற்று. அப்படிச் சொல்லுகையால் அதை அறியாமலேயே உண்மையும் வெளியாயிற்று. இதாலிய ரேடியோ கூறியதாவது :—“ஹிட்லரும், முஸோலினியும் அமெரிக்காவை ஒரு நாளும் பிசகான (சரியில்லாத) சமயத்தில் தாக்கமாட்டார்கள்”. அமெரிக்காவைத்தாக்க எது சரியான சமயமென்றும், ஜெர்மனி அதற்கு எப்பொழுது தயாராக இருக்குமென்றும் நாஸி தொழிற்கக்ஷியின் தலைவரான டாக்டர். லீ (Doctor Ley) ஜூன் மாதம் 6-ம் தேதியன்று ஒருகட்டுரை எழுதியிருக்கிறார். “இன்னும் இரண்டு வருஷங்களில், ஜெர்மனியையும், இதாலியையும் ஒருவராலும் தோற்கடிக்க முடியாது. ஒரு நாடாவது அவர்களை ஜயிக்கமுடியாது. அப்பொழுது, உலகம் முழுவதும் அங்குமிங்கும் சிதறிக்கிடக்கும் பல இடங்களிலிருந்து அகப்படும் மூலாதாரப் பொருள்களை ஆதாரமாகக்கொண்ட 1,700 லக்ஷம் ஆங்கிலேயர்கள், அமெரிக்கர்கள், இவர்களை ஐரோப்பா முழுவதுமுள்ள 3,000 லக்ஷம் ஐரேப்பியர்கள் ஐரோப்பா முழுவதிலிருந்து அகப்படும் மூலாதாரப் பொருள்களை ஆதாரமாகக் கொண்டு எதிர்ப்பார்கள்”.

## அவர்கள் வாயாலேயே உண்மை வெளியாகிறது.

உலகத்தை ஏமாற்றித்தான் ருஷ்யாவோடு பொல்ஷிவிஸம் (கடவுள் இல்லை என்னும் கொள்கை) என்னும் கொள்கையை எதிர்த்து உலகத்தின் க்ஷேமத்திற்காகச் சண்டை போடுவதாக பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் ஜெர்மனியின் வார்த்தைகளில் உலகமா மயங்கிவிடும். ஜூலை மாதம் 10-ம் தேதி இந்துஸ்தானி, பர்ஸியன், அராபிக் பாஷைகளில் பெர்லின் ரேடியோவில் ஒலிபரப்பும் பொழுது இப்பொய்யை ஸ்தாபிப்பதற்காக நார்வேயில் ஒரு பத்திரிகை பின்வரும் விஷயத்தை எழுதியிருப்பதாகக் கூறிற்று. “ஐரோப்பா முழுவதும் ருஷ்யாவின் பொல்ஷிவிஸம் (Bolshevism)த்தை எதிர்த்துப் போராடும்பொழுது, தலைவர் ரூஸ்வெல்ட் (Roosevelt) பின்னாலிருந்துகொண்டு ஐரோப்பாவைத் தாக்குகிறார்.” ஆனால் கடற்படைத் தலைவர் ல்யூட்ஸோ (Luetzow) ஜெர்மானியர்களுக்காக ஒரு நாள் நடத்திய சொற்பொழிவில் இதைப்பற்றி ஒன்றுகூடச் சொல்லவில்லை. ருஷ்யாவைத் தோற்கடித்து ருஷ்யாவையும், அதன் மூலம் பொருள்களையும்தன் வசமாக்கிக் கொள்வதே ஜெர்மனியின் நோக்கம் என்று அவர் ஒளியாமல் கூறினார். இதாலியர்கள் அவசரப்பட்டு பிசகாக உண்மையை வெளிப்படுத்திவிட்டார்கள். ருஷ்யாவில் அகப்படும் அபரிமிதமான தானியங்கள், எண்ணெய், மாங்கனீஸ் (Manganese) என்ற உலோகம் இவைகளைப்பற்றி நீண்டதோர் விமர்சனம் கூறி அவைகள் சீக்கிரம் அச்சு நாடுகளுக்குக் கிட்டும் என்று இதாலிய பேபர் கூறிற்று.

# அலெக்ஸாண்டிரியா (Alexandria)வின் மேல் ஜெர்மன் விமானப் படையெடுப்பு.

ஜூலை மாதம் 8-ம் தேதி இந்துஸ்தானி பாஷையில் ஜெர்மனியில் ஒலிபரப்பிய பொழுது, ஜூலை 6-ம் தேதி அலெக்ஸாண்டிரியாவை ஜெர்மன் விமானங்கள் தாக்கின வரலாற்றைக் கூறினார்கள். ஒரு பிரிடிஷ் யுத்த விமானமேற்றும் கப்பல், துறைமுகம், ரயில்வே ஸ்டேஷன் இவைகளெல்லாம் தாக்குண்டன. உண்மையில் பொது ஜனங்களின்மேல் தான் ஜெர்மன் விமானங்கள் படையெடுத்தன. இரண்டுபேர் கொல்லப்பட்டனர். பதினன்கு பேருக்குக் காயம். ஜெர்மானியர்கள் எப்பொழுதுமே பொது ஜனங்களின் மேல்தான் குண்டுகளை வீசுவது வழக்கம். இதற்கு முந்தி ஜெர்மானியர்கள் ஒரு தரம் அதே நகரத்தின் மேல் விமானத்தால் தாக்கினபொழுது, ஜூன் மாதம் 13-ம் தேதி அல் பலாக் (Al Balagh) என்னும் கெய்ரோ (Cairo) பத்திரிகை பின்வருமாறு எழுதியிருக்கிறது. "அச்சு நாடுகளின் விமானிகள் பொது ஜனங்களின் மேல் குண்டுகளைப் போடுவதற்குத் தயங்குவதில்லை. 'அச்சு நாட்டு விமானங்களுக்கு துறைமுகத்தில் இருக்கும் பிரிடிஷ் யுத்தக்கப்பல்களினருகே போகக்கூட தைரியம் கிடையாது. ஆனல் அவர்களுடைய ஆத்திரத்தை யெல்லாம் பொது ஜனங்களின் மேல் தான் அவர்கள் காட்டுவார்கள்."

---

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் 54.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1941— | | | | | மணி. |
| ஜூலை ...27, | ஞாயிற்றுக்கிழமை. | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | | வயலோகம் | ... | ,, | 6.00 |
| | | குடுமியாமலை | ... | ,, | 6.30 |
| 28, | திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் | ... | காலை | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.15 |
| | | நச்சாந்துபட்டி | ... | மாலை | 6.00 |
| | | விராச்சிலை | ... | ,, | 6.30 |
| 29, | செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.15 |
| | | திருக்கோகர்ணம் | ... | மாலை | 5.30 |
| | | திருமயம் | ... | ,, | 6.00 |
| | | கோனாபட்டு | ... | ,, | 6.30 |
| 30, | புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | | நல்லூர் | ... | மாலை | 6.00 |
| | | மண்டையூர் | ... | ,, | 6.30 |
| 31, | வியாழக்கிழமை ... | பனையப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | ராங்கியம் | ... | ,, | 6.30 |
| ஆகஸ்டு ... 1, | வெள்ளிக்கிழமை... | ராஜகிரி | ... | ,, | 6.00 |
| | | விராலிமலை | ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் 55.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| 3, | ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.15 |
| | | திருவப்பூர் | ... | மாலை | 5.30 |
| | | ஆலங்குடி | ... | ,, | 6.00 |
| | | ராசியமங்கலம் | ... | ,, | 6.30 |
| 4, | திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் | ... | காலை | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.15 |
| | | அன்னவாசல் | ... | மாலை | 6.00 |
| | | கீழக்குறிச்சி | ... | ,, | 6.30 |
| 5, | செவ்வாய்க்கிழமை. | பெருமாநாடு | ... | ,, | 6.00 |
| | | புல்வயல் | ... | ,, | 6.30 |
| 6, | புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | | குழிபிறை | ... | மாலை | 6.00 |
| | | செவலூர் | ... | ,, | 6.30 |
| 7, | வியாழக்கிழமை. | ராமச்சந்திரபுரம் | ... | ,, | 6.00 |
| | | ராயவரம் | ... | ,, | 6.30 |
| 8, | வெள்ளிக்கிழமை... | வாளரமாணிக்கம் | ... | ,, | 6.00 |
| | | ஏம்பல் | ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—26-7-41.